# அரசியல் தளம்



எஸ். எல். றியாஸ்
B.A, J.P

2431

# அரசியல் தளம்

எஸ்.எல்.றியாஸ் B.A., J.P.

170ஏ, ஹனிபா வீதி,
கல்முனை-07
ஸ்ரீலங்கா

## BIBLIOGRAPHICAL DATA

| | | |
|---|---|---|
| Title of the Book | : | ARASIYAL THALAM (Tamil) (POLITICAL RUNWAY) |
| Author | : | S.L. RIYAS B.A., J.P. |
| Edition | : | First |
| Copy right | : | © Author |
| Pages | : | 80 |
| No of Copies | : | 1000 |
| Printed | : | An-Noor Graphics, Kalmunai |
| Published by | : | 170A, Haniffa Road, Kalmunai-07 |
| Price | : | **100/=** |
| Published in | : | 2005 |

**ISBN 955-99165-0-5**


2431



## முன்னுரை ...

சமகால அரசியல்வாதிகளின் நடைமுறைகள் பற்றிய யதார்த்தத்தினை யாரோடு உரையாடுவது என்ற ஒரு உள்ளக்குமுறலை நண்பர்களுக்கு எழுதும் கடிதமாக நண்பன் றியாஸ் இந்நூலை எழுதியிருக்கிறார். இதனை ஒரு கடிதமாகவே நான் பார்க்க விரும்புகின்றேன். கடிதம் அனுபவங்களையும் செய்திகளையும் பகிர்ந்து கொள்கின்ற ஒரு வடிவம். அவ்வாறானதொரு விடயமே இந்நூலில் இழையோடியிருப்பதாக நான் எண்ணுகிறேன்.

ஒரு சாதாரண மனிதனுக்குரிய பலத்தோடும் பலவீனத்தோடும் றியாஸ் வாழ்ந்து மறைய விரும்பினாலும் அவ்வாறு நான் அவரைப் பார்க்க விரும்பவில்லை. சமுகத்தின் போலித்தனங்களைக் கண்டு சும்மா உட்கார்ந்திருக்கின்ற ஒரு மிகச் சாதாரண மனிதனல்ல அவர். அதற்கெதிரான உணர்ச்சிவசத்தோடு கொதித்தெழுகின்ற ஒருவர் அவர்.

அரசியலிலே ஈடுபடுகின்றவர்களுக்கு இன்று அரசியல் ஞானம் என்ற ஒன்று அவசியப்படுவதில்லை. சாதாரண மனிதனை வெற்றிகொள்கின்ற திறன் இருக்குமாக இருந்தால் அது போதும். அந்தத் திறனை தனதுநண்பனுக்குச் சொல்வதாகவே இக்கடிதம் அமைந்திருக்கின்றது. அவ்வாறு சொல்வதன் மூலம் சமகால அரசியல்வாதிகளின் போலித்தனத்தையும் போக்கரித்தனத்தையும் அவர் நையாண்டி செய்ய முற்பட்டிருக்கின்றார். இந்த விடயம் ஒரு கடிதத்துக்குள் ஆகுமான ஒன்றே.

றியாஸின் அரசியல் ஞானத்தினை நாம் இங்கு கடிதத்தின் மூலம் குறைத்து மதிப்பிட முடியாது. அரசியல்

பற்றிய வரலாற்றுக் கருத்துக்களையும் அதன் தெய்வீக உரிமைக் கோட்பாடாக அதனைக் காணவருகின்ற விடயத்தையும் சமுதாயத்தின் ஊடாக அதைக் கண்டுகொள்கிற விடயத்தையும் அவர் தன் நூல் மூலம் விளக்கியிருக்கிறார். சமகால அரசியல்வாதிகளின் ஸ்திரத்தை கட்டியெழுப்புவதில் இளைஞர்கள், பெண்கள் எத்தகைய பங்கினை வகிக்கின்றனர் என்பதனை விரிவாக அவர் நோக்கியிருக்கின்றார். சமூக உருவாக்கத்திலே மதம் ஒரு முக்கியமான சக்தி. அரசியல்வாதிகளால் மதம் எப்படிப் பாழ்பட்டுப் போகின்றது. பிரதேசவாதம், மொழி ஆகிய கருவிகள் எவ்வளவு தூரம் அரசியலுக்கு உதவுகின்றன. அதிகாரம், வர்த்தகம், உலகமயமாதல், பொருளாதார சமநிலை முதலானவை நடைமுறை அரசியலை எவ்வாறு பாதித்திருக்கின்றன ஜனநாயகமும் ஜனநாயகத்தின் [illegible] பாராளுமன்றமும் இன்று எவ்வளவு தூரம் கேலிக்கூத்தாக இருக்கின்றன என்பன போன்ற விடயங்களையெல்லாம் அவர் பல்கோணங்களில் அலசுகின்றார்.

இந்த சூழ்நிலைக்குள்ளே அரசியல்வாதிகள் விற்பனைப் பொருளாக மாறியிருக்கின்ற நிலைமையிலே ஒரு புரட்சிகரமான இளைஞன் சரியான அரசியல்பாதையை இனங்கண்டு கொண்டு செயற்படுவதுபோல நீ அமையவேண்டும் அல்லது நீயும் மோசடிக்காரனாக மாறிவிடு என்ற தத்துவத்தைத்தான் தனது நண்பனுக்கு றியாஸ் உணர்த்த வருகின்றார்.

உண்மையில் இன்றிருக்கின்ற பிரச்சினை இதுதான். றியாஸ் எதிர்பார்க்கின்ற அரசியல்வாதியை நாம் எப்படி உருவாக்க வேண்டும்? பிரதேச, மொழி, பொருளாதாரம், பிரபல்யம் என்பன போன்ற சல்லடைகளிலிருந்து அவனை எப்படி மீட்டெடுக்க முடியும்? என்பது முக்கியமான விடயம்.





மீண்டும் அரிஸ்டோட்டிலை அல்லது பிளடோவை அல்லது மக்கியவல்லியை நாம் பிறப்பிக்க வேண்டுமா? அல்லது அதிகாரம் என்ற கருவியை உயர்ந்த இடத்திலுள்ள சமயம் அல்லது சமயவாதிகளிடம் கையளிப்பதா? சமுகத்திலிருக்கின்ற குழப்பமான சூழ்நிலைக்கு எப்படி தீர்வு காண்பது? ஒரு நபர் ஆட்சி அல்லது பாராளுமன்ற ஆட்சி என்று பார்ப்பதா? இனவாதக் கருவிகளிடமிருந்தும் போராட்ட அல்லது தீவிரவாதக் கருவிகளிடமிருந்தும் எப்படி விடுபடுவது? இவற்றுக்குள்ளேயே றியாஸின் அரசியல்வாதியை நாம் பார்க்க வேண்டும்.

மாறிவரும் உலகில் இது முதல் சிக்கலான விடயம். 'இந்நூலிலுள்ள ஒரு சிறிய விடயமாவது உங்கள் வாழ்வில் கண்ட, கேட்ட, அனுபவதித்த விடயம் என உங்கள் உள்மனது உங்களுக்கே கூறினால் இந்நூல் வெற்றிபெற்று விட்டது என திருப்தியடைவேன்'. இந்த வகையில் றியாஸின் ஆதங்கம் நிறைவேறுமென நான் நம்புகின்றேன்.

ஒரு ஆய்வாளனுடைய பார்வையில் இந்நூலை இருவர் சம்பந்தப்படுகின்ற கடிதம் என்றுதான் நான் பார்க்கிறேன். கடிதத்துக்குரிய பலமும், பலவீனமும் அரசியல் தள(ம்)த்துக்கு உண்டு. றியாஸின் எழுத்துக்கள் மூலம் அவர் எதிர்பார்ப்புக்கள் நிறைவேறவேண்டுமென்று மெச்சுகிறேன்.

**எம். எம். பாஸில்,**

விரிவுரையாளர்,

அரசியல்துறை,

தென்கிழக்கு பல்கலைக்கழகம், ஸ்ரீலங்கா

## என்னுரை ...

நவீன உலகில் ஒரு மகாத்மாவாக வாழ நான் விரும்பவில்லை. ஒரு சாதாரண மனிதனுக்குரிய அத்தனை பலம், பலவீனங்களோடும் வாழ்ந்து மறையவே விரும்புகிறேன்.

ஒரு கற்பனையான வாழ்வைச் சுவைப்பதற்காக எனது சந்தோசமான வாழ்நாளை சோதனையாக மாற்ற விரும்பவில்லை. இதனால்தான் வாதப்பிரதிவாதங்களைக்கூட தவிர்ந்து வருகிறேன். ஒருவருக்கு ஒரு குறிப்பிட்ட விடயம் சரியாக இருக்கும். அதை நான் ஏன் பிழையெனக் கூறவேண்டும்? அப்படிக் கூற நான் அவனைவிட அறிவில் கூடியவனா? அல்லது அவன்தான் அறிவில் குறைந்தவனா?

உலகில் வாழ்ந்த அடையாளத்துக்காக ஏதாவதொரு எச்சத்தை விட்டுச் செல்ல வேண்டும் என்று ஒரு காகம், குருவிகூட ஆசைப்படும். அதுபோன்றதொரு ஆசைதான் எனதும். அதற்காக கோட்பாடு, தத்துவம் என்று கூறி சாதாரண மனிதனான என்னால்கூட பயன்படுத்த முடியாதவிடயங்களை உலகிலுள்ள பத்து சத வீதத்துக்கும் குறைவான ஒரு சமுகத்துக்கு விட்டுச் செல்ல விரும்பவில்லை.

சாதாரண இயல்பு வாழ்வு நடாத்தும் 90 சதவீதமான மக்களுக்கு யதார்த்தத்தையும் அதனது போக்கையும் அவனது மொழியிலேயே கூறி வைக்க முனைந்துள்ளேன். ஏனெனில் உண்ணும் உணவிலிருந்து சுவாசிக்கும் காற்றுவரை





அரசியல்வாதிகளின் தயவிலேயே கிடைக்கும் காலம் வெகுதூரத்திலில்லை. என்பதால், சாதாரண மனிதனும் அரசியல் இன்பத்தை அனுபவிக்க ஆசைப்படுவது தவிர்க்க முடியாததாகி விட்டது. உண்மையில் எனக்கு நண்பர் கடிதம் எழுதினாரா? என்ற வாதப்பிரதிவாதங்களுக்குக்கூட நீங்கள் நேரத்தைச் செலவழிக்கத் தேவையில்லை. கடிதம் எழுத நினைப்பவனுக்கு என்று நினைத்துக் கொள்ளுங்கள்.

இந்நூலிலுள்ள ஒரு சிறிய விடயமாவது உங்கள் வாழ்வில் கண்ட, கேட்ட, அனுபவித்த விடயமென உங்கள் உள் மனது உங்களுக்கே கூறினால் இந்நூல் வெற்றி பெற்று விட்டது எனத் திருப்தியடைவேன். ஊர் கூடிச் சொன்னால் அதில் பொய் இருக்கும். எனது நண்பரின் கடிதத்தைப் போல ....

- ஆசிரியர்

இலங்கை
2005-05-05

அன்பு நண்பா!

உனது கடிதம் கிடைத்தது. எல்லோரையும்போல் பணம் சம்பாதித்தல், அரசியலுக்குள் வருதல், மேலும் வருமானத்தைப் பெருக்குதல் என்ற கொள்கையிலேயே நீயும் கவரப்பட்டுள்ளாய் என்பதை என்னால் அறிய முடிகின்றது. அரசியல்வாதியாவதா? இல்லையா? என்பது உன்னைப் பொறுத்த விடயம். என்னிடமும் ஆலோசனை கேட்க வேண்டும் என நீ நினைத்ததை பெருமையெனக் கருதுகிறேன்.

அரசியலில் தத்துவம் என்று ஒன்றிருக்கிறது. நடைமுறை விடயம் என்று ஒன்றிருக்கிறது. இப்போதெல்லாம் யாரும் கொள்கைகளைக் கூறி ஆட்சிக்கு வருவதில்லை. இவர்கள் வெளியிடும் கொள்கைப் பிரகடனங்களை மக்கள் ஆர்வத்துடன் படிப்பதுமில்லை. எதிர்க்கட்சிக்காரர்களின் குறைகளை நன்றாக விமர்சிக்கக் கற்றுக் கொண்டால் அதுவே பிரதான வெற்றிக்கு வழிவகுக்கும். ஆகவே, தேர்தல் வாக்குறுதி பற்றி நீ கவலைப்படத் தேவையில்லை. ஏனென்றால், தேர்தல் வாக்குறுதிகளை மக்களும் நம்புவதில்லை. நீ தேவைப்பட்டால் உரிமை, சலுகை என கண்ணுக்குப் புலப்படாததும் கைக்குள் அகப்படாததுமான

விடயங்களை வாக்குறுதிகளாக வழங்கிவிடு. இதை வைத்துத்தான் தற்போது நவீன அரசியல் நடைபெறுகின்றது.

இன்று அரசியலில் மிகவும் செல்வாக்குச் செலுத்தும் ஒரு விடயமாக உரிமை என்ற அம்சம் காணப்படுகின்றது. எனவே நீயும் இதைக் கூறியே உனக்குத் தேவையான அனைத்தையும் அடைந்து கொள்ள முடியும். அரசியலைப் பற்றி நீ கவலைப்படாதே. மக்களின் முட்டாள்தனத்தினை எப்படி உனக்குச் சாதகமாகப் பயன்படுத்துவது என்ற முறையை மட்டும் தெரிந்து கொண்டால் நீதான் சிறந்த அரசியல்வாதி.

இங்கு சில குறுநில மன்னர்கள் இருக்கின்றனர். அவர்களுக்கு சில சலுகைகளை வழங்கினால் அவர்கள் உனக்குத் தேவையான வாக்குகளைப் பெற்றுத் தருவார்கள். எனவே நீயும் உனது குடும்பமும் பொதுமக்களிடம் நேரடியாகச் சென்று பல்லைக் காட்டத் தேவையில்லை. தற்போது அரசியல்வாதிகள் செய்வதுபோல நீயும் பொதுமக்களை பொதுமேடைகளில் மாத்திரமே சந்தித்தால் போதும்.

எனவே எக்காரணம் கொண்டும் கண்ணுக்குப் புலப்படும் எந்த விடயத்தையும் தருவேன் என மட்டும் வாக்குக்கொடுத்துவிடாதே. பின்னர், மக்கள் அதைக் கேட்பார்கள். எதிர்க்கட்சிக்காரன் என்ற போர்வையில்





வந்து உனது இடத்தைப் பிடிக்கத் துடிக்கும் உன்னைப் போன்ற ஒருவனும் இருப்பான். அவனுக்கு வழிசமைத்துக் கொடுக்க உனது வாக்குறுதி ஒரு காரணமாக அமைந்து விடும்.

சில விடயங்களை தகவலுக்காக தெரிந்து வைத்துக் கொள். அமுல்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டால் பயன்படுத்தலாம்.

அரசியல் என்பது கிரேக்க காலப் பழமைவாய்ந்த ஒரு விடயம். இன்று பல்கலைக் கழகங்களில் கற்பிக்கப்பட்டு வருகின்ற ஒரு விடயம். ஆனால், அரசியல்வாதிகளுக்கு அவசியமில்லாத விடயம். மனிதன் ஒரு காலத்தில் சிறு சிறு குழுக்களாக சிதறி வாழ்ந்தான். மனித வாழ்வின் மேம்பாட்டுக்கான சிறந்த ஒழுங்கமைப்பாக அரசியல் காணப்பட்டது. பல்வேறு அறிவியல் கற்கைகள் கிரேக்கத்திலிருந்து ஆரம்பித்ததைப்போல் அரசியலும் கிரேக்கர்களால் பெறப்பட்ட ஒரு குழந்தை. இந்தக் குழந்தைக்கு சுயமாக செயற்பட முடியாது. அதனால்தான் அதனை எல்லோராலும் மிக இலகுவாக கையாள முடிகின்றது.

அரசியல் என்பது சேவையா? தொழிலா? என்பது தேர்தலுக்கு அரசியல்வாதிகள் செய்யும் முதலீடுகளிலிருந்து மக்களுக்கு வெளிப்படும். இருந்தாலும், ஒரு நாட்டில் பிரஜைகள் வகிக்கின்ற எல்லாப் பதவிகளையும் விட அரசியல்வாதிகள் வகிக்கின்ற பதவிகள் மிக மிக முக்கியமனவை. ஒரு நாட்டின் ஆட்சித்துறை இயந்திரத்தை வழிநடாத்துவது என்பது இலகுவான விடயமல்ல.

அரச சேவையில் ஒரு காரியாலய காவலாளியை நியமிப்பதற்குக்கூட பல்வேறு போட்டிப் பரீட்சைகளும் நேர்முகப் பரீட்சைகளும் என இத்தியாதி பரீட்சைகளை நடாத்தியே தேர்வு செய்கின்றனர். அதேநேரம் அரசியல்வாதியாக வர விரும்பும் ஒருவரிடம் மட்டும் ஏன் இதுவரை கல்வித்தகைமைகள் எதிர்பார்க்கப்படுவதில்லை?

கல்வி கற்றவர்கள் மிகக் குறைவாகக் காணப்பட்ட காலப்பகுதியில் இது சரியாக இருந்திருக்கலாம். இலங்கை அனுபவத்தில் சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்பிருந்த அரசியல்வாதிகளும், அமைச்சர்களும் போதுமானளவு கல்வித்தகைமைகளைப் பூர்த்தி செய்திருந்தனர். இலங்கையில் கல்வித்துறை, சிந்தனைப்போக்கு என்பன வளர்ச்சி கண்டு வருகின்ற சுதந்திரத்துக்குப் பின்னரான 50 ஆண்டுகளில் ஏன் அரசியலுக்கு வருகின்றவர்களுக்கு குறிப்பிட்ட கல்வித்தகைமை இருக்க வேண்டும் என எதிர்பார்க்கக் கூடாது. இன்று எமது நாட்டில் குறைந்த கல்வித்தகைமை உள்ளவராக ஒரு பட்டதாரி காணப்படுகின்றார். இப்படியிருக்க அரசியல்துறைக்குள் வரவிரும்பும் ஒருவர் குறைந்தபட்சம் ஒரு பட்டதாரியாக இருக்க வேண்டும் என்ற நிபந்தனையை விதிக்க முடியாமல் இருக்கின்றது என்பது வியப்பாகவே உள்ளது.

அரசியல் பற்றி பல்வேறு அறிஞர்கள் தாங்கள் வாழ்ந்த கால சூழ்நிலைகளுக்கு ஏற்ப பல்வேறு வியாக்கியானங்களை வழங்கியிருக்கின்றனர். அதுபற்றித் தெரிந்து கொண்டுதான் அரசியல்வாதியாக வர வேண்டும்.





என்ற நியதியில்லை. அரசியலில் தத்துவம், கோட்பாடு என்பவற்றை உன்னாலும் ஏற்படுத்த முடியும். அதிகாரம் உன்னிடம் வந்துவிட்டால் உனக்குத் தாளம் போடவும், நீ கூறுவதுபோல் நடக்கவும் ஒரு கூட்டம் கூடிவிடும். அப்போது நீ எதைச் சொன்னாலும் அதுதான் தத்துவம்; அதுதான் வேதம்; அதுதான் அரசியல்.

இருந்தாலும், எனக்குக் காலங்காலமாக ஒரு கவலையிருக்கிறது. அதாவது எத்தனையோ அறிஞர் பெருமக்கள் இந்த அரசியலை முறையாக வடிவமைத்து அதன் மூலம் நாட்டு மக்களுக்கு சிறந்த ஆட்சியையும் ஆட்சியாளர்களையும் கொடுக்க வேண்டுமென பட்ட கஷ்டங்கள், செய்த முயற்சிகள் எல்லாம் இன்று எந்தப் பிரயோசனமும் இல்லாமற் போய்விட்டது. இதை எப்படித் தடுத்து நிறுத்துவது என்பதுதான் எனது ஒரே கவலை. இருந்தாலும், எனது நண்பனான உனக்கு தத்துவத்துடன் யதார்த்தத்தையும் கூற வேண்டிய நிலை எனக்கேற்பட்டுள்ளது. ஏனெனில் உன்னைவிட குறைந்த கல்வியறிவும், உலகறிவும் உள்ளவர்களெல்லாம் மக்கள் பிரதிநிதிகளாக இருக்கும்போது எனது நண்பனான நீ அரசியலுக்குள் வருவது எனக்கும் பெருமைதானே. அரசியல் என்பது நான் ஏற்கனவே கூறியது போல் ‘‘மக்களின் மடமையில் குளிர்காய்வது; அவர்களை விழிப்படையாமல் அப்படியே வைத்துக் கொள்வது என்பதன் மூலம் எமது அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்ளல் என்பதாகும்’’.

இன்று இனம், மதம், பிரதேசம் என்ற வாதங்கள் அதிகாரத்தைத் தக்கவைப்பதிலும், பெற்றுக் கொள்வதிலும் அதிகம் செல்வாக்குச் செலுத்துகின்றன. எனவே, இனவாதம், மதவாதம், பிரதேசவாதம் போன்றவற்றை எப்படித் தூண்டுவது என்பதை நீ அறியாதிருக்கலாம். அரசியலுக்குள் வந்து குறைந்தது இரண்டு அரசியல் கூட்டங்களில் கலந்துகொண்டால் அதன் நுணுக்கங்களை நன்கு அறிந்து கொள்வாய். எனவே, அதுபற்றி அதிகம் சிந்திக்க வேண்டாம். உனது கையெழுத்தை அழகாகப் போடக் கற்றுக்கொள். அதுமட்டுமே உனக்கு உபயோகமாக இருக்கும்.

பல்லின, மத, கலாச்சாரங்களைக் கொண்ட மக்கள் கூட்டம் தங்கள் இஷ்டம் போல் வாழத்தொடங்குகின்றபோது அங்கு பிரச்சினைகள் தவிர்க்க முடியாதவைகளாக மாறிவிடுகின்றன. ஒவ்வொரு சமூகமும், குழுவும் தாமே மேலானவர்கள்; ஏனைய அனைவரும் தம்மைவிட தாழ்வானவர்கள் என்ற மனோநிலையை மேலோங்கச் செய்து வாழ்க்கையை நடாத்தத் தொடங்கியதனால்தான் உலகம் பல்வேறு யுத்தங்களைச் சந்தித்ததுடன் பல மில்லியன் உயிர்களை இழந்தது. ஆனாலும் இதிலொரு வியப்பு என்னவென்றால் ''ஒரு சமுகம் தனது மேலாதிக்கத்தை எம்மீது சுமத்துகிறது என்று அதற்கெதிராகப் போராடும் மற்றச் சமுகம், தனக்குக்கீழ் வாழும் அல்லது தன்னைவிட குறைந்த அளவுள்ள சமுகத்தின்மீது தனது மேலாதிக்கத்தைச் செலுத்த





முற்படுகின்றது என்பதுதான்''.

எனவே, மனிதன் வாழ்கின்றான் என்றால் அங்கு பிரச்சினை என்பது தவிர்க்க முடியாததொன்றாகி விடுகின்றது என்பது உனக்கு புரிகின்றதல்லவா. யுத்தங்கள் மூலம்தான் பல புதிய அரசுகள் தோற்றம் பெற்றிருக்கின்றன. இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின் தோற்றம் பெற்ற புதிய அரசுகளை நாம் உதாரணங்களாகக் கொள்ளலாம்.

இருந்தாலும், இந்த வேற்றுமைகளைக் களைந்து எல்லோரும் ஒரே நாட்டு மக்கள் என்ற உணர்வோடு சகலருக்கும் சம உரிமை வழங்கி நிருவகிக்கும் ஒரு முறைமையாக இந்த அரசு தோற்றம் பெற்றது. அரசியல் என்பதை அறியும்போது அது பொதுவாக அரசாங்கம் பற்றிய அறிவாகவே நோக்கப்படுகின்றது. இங்கு அதிகாரமே மேலோங்கி நிற்கும். மனிதனின் நடத்தை மீதான அதிகாரத்தின் கட்டுப்பாடுதான் அரசியல் என்பது கடந்த காலங்களில் கோடிட்டுக் காட்டப்பட்ட ஒரு விடயமாகும். எனவேதான் அதிகாரம் செலுத்தல் என்பது அரசியல்வாதிக்கும் மிகவும் முக்கியமானது. அதேநேரம் மக்களும் உன்னிடமிருந்து அதைத்தான் விரும்புவர்.

இன்று உலகில் எங்கும் இலட்சிய அரசு என்பதோ இலட்சிய அரசியல்வாதிகளோ இல்லை. மகாத்மா காந்தி, நெல்சன் மண்டேலாவின் பின்னர் இலட்சியம் என்ற

வார்த்தை அரசியலிலிருந்து அந்நியமாகி விட்டது. இப்போதெல்லாம் இலட்சியம் பற்றிப் பேசுகின்றவர்கள் தம்மை ஒரு மகாத்வாகவோ அல்லது மண்டேலாவாகவோ காட்டிக் கொள்ளப்போடுகின்ற வேடமேயன்றி வேறொன்றுமில்லை.

கடந்த கால வரலாறுகளை ஆய்வதன் மூலம் அரசு பற்றிய பல்வேறு தகவல்களை நாம் பெற்றுக் கொள்ள முடியும். அவை நமக்குக் கற்றுத்தருவது என்ன? தனி மனிதன் தன் இஷ்டம் போல் வாழந்து பின்னர் குடும்பத்தை நிர்வகிக்கத் தொடங்கினான். அதன் வளர்ச்சியடைந்த நிலையாக அரசியலின் தோற்றம் காணப்படுகின்றது. சமுகத்தின் இறுக்கமான பிடிப்பின்மேல் தோற்றம் பெற்ற இவ் அரசானது இன்று பொருளாதாரத்தின் மீது கட்டியெழுப்பப்பட்ட ஒரு கட்டடம் போன்றாகி விட்டது. குடும்ப உறவுகளையே பொருளாதாரம் தீர்மானிக்கும் இக்காலப்பகுதியில், அரசியல்வாதிகள் தமது பொருளாதாரத்தைப் பெருக்குவதன் மூலம் தமது மேலாதிக்கத்தை வாக்காளர்மீது திணிக்கின்றனர்.

வாக்காளர்களை உனக்கு அடிபணிய வைப்பதில் பொருளாதாரம் கூடிய செல்வாக்குச் செலுத்தும். ஆகையால் உனது பொருளாதாரத்தைப் பெருக்குவதில் கூடுதல் கவனம் செலுத்து. அதற்கொரு கருவியாக இந்த அரசியலை உபயோகிக்க முடியும்.





மனிதன் என்று வாக்களிக்கும் உரிமையைப் பெற்றானோ அன்றே அவன் அரசியல்வாதியாவதற்குரிய தகுதியையும் பெற்று விடுகின்றான். இந்த உண்மையை அவன் விளங்காமல் இருப்பதனாலேயே நீ அரசியல்வாதியாக வர ஆசைப்படுகின்றாய் என்தையும் நான் நன்கு உணர்ந்துள்ளேன். இவர்கள் உனக்கு வாக்களிக்கும் வரை உனது எஜமானர்கள். நீ வெற்றி பெற்றுவிட்டால் உனது அடிமைகள். வாக்களித்து விட்டான் என்பதற்காக இவனை தோளில் சுமக்க வேண்டும் என நீ நினைத்து விடாதே. ஏனென்றால் இதுவரை எந்தவொரு அரசியல்வாதியும் வாக்காளனை மதித்ததில்லை. நீ அவர்களை அதிகம் மதித்தால் அவர்கள் சிலவேளை உன்னைச் சந்தேகக் கண்கொண்டு பார்க்க நேரிடும்.

இந்த அரசு தோற்றம் பெற்ற காலங்களில் மன்னர்கள் தம்மை இறைவனின் பிரதிநிதிகள் என்றும், தமது வசனங்கள் இறைவனின் வசனங்கள் எனவும், மக்களை நம்ப வைத்திருந்தனர். அரசர்கள் அல்லது ஆட்சியாளர்கள் இறைவனின் பிரதிநிதிகள். இறைவனிடமிருந்து அதிகாரங்களைப் பெறுபவர்களே அரசர்கள். இவ் அரசர்களே சமுதாயச் சட்டங்களை உருவாக்குகின்றார்கள். அதனால் அச்சட்டங்களுக்குக் கட்டுப்படுதல் மக்களின் கடமை. சமுதாய மக்கள் சட்டங்களை உருவாக்க முடியாது. விரும்பியோ விரும்பாமலோ இச்சட்டங்களுக்குக் கட்டுப்படுதல் மக்களின் கடமை என தெய்வீக உரிமைக்கோட்பாடு கூறுகின்றது.

அதற்குப் பிறகு எத்தனையோ கோட்பாடுகள் வந்து மக்களே எஜமானர்கள்; ஆட்சியாளர்கள் அல்ல என வலியுறுத்தியுள்ளபோதிலும், மக்கள் இன்றும் அரசியல்வாதிகளை இ கடவுளின் பிரதிநிதிகள் என்று நேரடியாக விழிப்பதை விடுத்து அவர்களை அப்படியே காண விளைவது மக்கள் தொடர்ந்தும் அரசியல் ரீதியில் பின்னோக்கியே செல்கின்றனர் என்பதை உணர்த்துகின்றது. இதனால்தான் பாராளுமன்றத்தில் அடிக்கடி பிரச்சினைகளும் உறுப்பினர்களின் இ உண்மையான குணங்களும் பிரதிபலிக்கத் தொடங்குகின்றன. நிச்சயமாக ஒருவனால் இப்படியான பிரதிபலிப்புக்களை உடனேயே ஏற்படுத்திவிட முடியாது. எந்த விடயங்களுக்கு அவர்கள் இயற்கையாக பழக்கப்பட்டிருக்கின்றார்களோ அதுதான் முதலில் பிரதிபலிக்கும். எனவே, நீ இப்படியான விடயங்களைக் கண்டிக்கக் கூடாது. ஏனெனில், உனது குறைகளை மறைப்பதற்கு இவைகளை நீ பயன்படுத்த முடியும்.

இங்கு மன்னனின் நிலை இறைவனுக்கு சமமாக மதிக்கப்படுகின்ற காரணத்தால் அச்சமுகத்தில் மன்னனே மிக உயர்வானவனாகக் கருதப்படுகின்றான். இது தற்போதைய அரசியல்வாதிகளுக்கும் பொருந்தும். எனவே அம்மன்னனும் தெய்வீகச் சட்டத்துக்குக் கட்டுப்பட்டவன் எனக் கூறப்பட்டபோதிலும் தெய்வீக சட்டத்தையும் பிறப்பிக்கும் உரிமை மன்னனுக்கே இருப்பதால் அச்சமுதாயத்தில் மன்னனே மிக உயர்ந்தவானகக்





கருதப்படுவான். எனவே இன்றும் வாக்களானர்களுக்கிடையே மிகவும் செல்வாக்குச் செலுத்தும் கோட்பாடாக தெய்வீக உரிமைக் கோட்பாடு காணப்படுகின்றது.

இளைஞர்கள் என்ற சொல்லால் அழைக்கப்படுகின்ற குழு யார் என்று வரையறை செய்வதில் இன்று பலருக்கும் சிக்கல்கள் இருப்பது போன்று எனக்கும் இருக்கின்றது. இருந்தாலும், இவர்களை வரையறை செய்ய வேண்டியது இன்றியமையாததாக இருக்கின்றது. ஏனெனில் இன்றைய இளைஞன் நாளைய தலைவன்; இளைஞர்களின் கைகளிலேயே எதிர்காலம் உள்ளது என்ற முன்னோர் சொற்களை வைத்து பார்க்கின்றபோது ஒரு தேசத்தைக் கட்டியெழுப்புவதிலும் சமுகத்தை ஒழுங்கமைத்து நிர்வகிப்பதிலும் இளைஞர்களின் பங்கு பிரதானமானது என்பதை உணர முடிகின்றது.

சமுகப்பார்வையில் இளைஞன் என்பவனை வாழ்க்கையின் ஆரம்ப கட்டத்தில் இருப்பவன் எனக் கூறலாம். வயதை அடிப்படையாக வைத்து பெரும்பாலும் இளைஞர் என்ற பதத்துக்கு வரைவிலக்கணம் கொடுக்கப்பட்டுள்ளது. பொருள்தாரத்தை அடிப்படையாக வைத்து இளைஞனை வரைவிலக்கணப்படுத்துகின்றபோது ஒருவன் சுயமாக தொழிலை ஆரம்பித்து வாழ்க்கையைக் கொண்டுசெல்லக் கூடிய காலத்தை குறிப்பிடலாம். பொதுவாக, 15 வயதுக்கும் 35க்கும் உட்பட்டவர்களை

இளைஞர்கள் என பலரும் வரைவிலக்கப்படுத்தியுள்ளனர். ஒரு சமுகத்தின் இயக்கத்தில் மிகப் பெரும் பங்கை வகிக்க வேண்டிய இன்றைய இளைஞர்கள் வாக்காளர்கள் என்பவர்களில் மிக முக்கியமானதொரு இடத்தினை வகிக்கின்றனர்.

இளைஞர்கள் பெரும்பாலும் பொதுவிடயங்கள் தொடர்பாகவே உன்னைச் சந்திக்க வருவார்கள். இதுகூட இன்று மிகவும் குறைவடைந்து விட்டது. இப்படியானவர்களுக்கு நாம் ஏற்கனவே கூறியது போன்று தொட்டும் பார்த்தும் உணர முடியாத விடயங்களை வாக்குறுதிகளாக வழங்கி விடு. அவர்கள் உனது வாக்குறுதியை விட நீ அவர்களுடன் அன்போடு நடந்து கொள்ள வேண்டும்; அவர்களை பெயர்கூறி உரிமையோடு அழைக்க வேண்டும் என்பதையே விரும்புகின்றனர். அதற்காக நீ அவர்களது பெயர்களை நினைவில் வைத்திருக்க வேண்டும் என்ற எந்தவித கட்டுப்பாடும் இல்லை. உனது பிரதேசத்தோடு மிகவும் நெருங்கிய உறவுள்ள ஒருவரை உனக்குப் பக்கத்தில் வைத்திருந்தால் போதும்.

பெண்கள் எப்போதும் உணர்ச்சி வசப்படக் கூடியவர்கள். அவர்களை அன்போடு உறவு முறைகளைக் கூறி அழைத்தாலே போதும். அவர்கள் சமைப்பதும் ஆண்களின் ஆசைகளுக்கு அடிபணிவதும்தான் தமது ஒரே வேலை என நினைத்துக் கொண்டிருக்கும்வரை





உனது இராச்சியம் தொடரும். அவர்களை அந்த சிந்தனையை விட்டும் விலகாதபடி பார்த்துக் கொள்ள வேண்டும்.

கொள்கை என்ற விடயம் மருவி, அதிகமான அரசியல்வாதிகள் பொதுமக்களிடமிருந்து அனுதாப வாக்குகளையே பெறுகின்றனர். தமது முன்னோர்களைப் பற்றியும் பிற சமுகங்கள் தமது சமுகத்தை அடிமைகளாக்கி வைத்திருப்பதாகவும் கூறி அந்த அனுதாபத்தின மூலமே அதிகம் வாக்குகளைப் பெற்று விடுகின்றனர்.

இளைஞர்கள் கொஞ்சம் கல்வி கற்று விட்டால் அவர்களைவிட புத்திசாலிகள் உலகிலேயே இல்லை என்று எண்ணத் தொடங்கி விடுகின்றனர். இந்த எண்ணம் உள்ளவரை அவர்கள் மூடர்கள் என்பதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். இவர்கள் தேவைகளை மையமாக வைத்து அரசியல்வாதிகளோடு பழக ஆரம்பிப்பர். இவர்களை சமாளிப்பதும் அரசியல்வாதிகளின் பிரதான வேலைகளிலொன்றாகும்.

இளைஞர்கள் சுயநலக்காரர்கள். தமது தனிப்பட்ட தேவைகள் இருக்கின்றன என்று தெரிந்து கொண்டால் இவர்களுக்கு பொதுவிடயங்கள் இரண்டாம் பட்சமாகி விடும். எனவே இவர்களை அரசியல்வாதிகள் தமது கட்டுப்பாட்டின்கீழ் வைத்திருக்க வேண்டுமென்றால்

அவர்களின் தேவை என்ன என்பதை நன்கு தெரிந்து வைத்திருக்க வேண்டும். அவைகளை நிவர்த்தி செய்வதன் மூலம் தமக்கெதிரான இளைஞர்களின் எழுச்சியை கட்டுப்படுத்த முடியும். ஒருநாளும் இவர்களை குழுக்களாகச் சந்திக்கக் கூடாது. மனிதன் எந்தவொரு விடயத்திலும் திருப்தியடைய மாட்டான். ஒன்றை அடையும்வரை பொறுமையாக இருந்து அதை அடைந்த பின் அமைதியாவான். மீண்டும் தகுதிக்கு மீறி ஆசைப்படுவான். ஆகையால் மீண்டும் கிளர்ச்சிகளில் ஈடுபடுவான். இவர்களின் தேவைகளை ஒரேயடியாகத் தீர்த்து வைத்துவிடக் கூடாது. இதனாலதான் இளைஞர்களை தன்னம்பிக்கையற்றவர்களாக மாற்றுவதில் அரசியல்வாதிகள் அதிக ஈடுபாடு காட்டிவருவதோடு சிலர் வெற்றியும் கண்டிருக்கின்றனர்.

எதையும் இலவசமாகப் பெறுவதில் மக்கள் காட்டுகின்ற ஆர்வம், தம்மை வளப்படுத்துவதிலோ அன்றி தமது பொருளாதாரத்தினை வளப்படுத்துவதிலோ அல்லது சுயதொழில் முயற்சிகளில் ஈடுபடுவதிலோ காட்டுவதில்லை. நிலைமை இப்படியிருக்க நாம் அவர்களை சுயதொழிலில் ஈடுபட வைத்து எல்லோரையும் பொருளாதார செழிப்புள்ளவர்களாக்கும் திட்டத்தினை முன்கொண்டு செல்கின்றபோது அவர்கள் அதனை விரும்பமாட்டார்கள். எம்மை ஆதரிக்கவும் மாட்டார்கள். எனவே அவர்களை தங்கி வாழச் செய்வதன் மூலமே உனது அரசியல் பயணத்தை வெற்றிகரமாகத் தொடர முடியும்.





பல்கலைக் கழகங்களில் இருக்கின்ற காலங்களில் மாணவர்கள் பொதுவுடமை பற்றியும், சோசலிசம் பற்றியும் பேசுவார்கள். அவற்றை நாம் கண்டு கொள்ளத் தேவையில்லை. ஏனெனில், அவர்கள் அப்படிச் சொல்வதற்கு மாற்றமாகவே அவர்களது பிற்கால நடவடிக்கைகள் அமைந்திருக்கும். வாகனங்களையும் பொதுச்சொத்துக்களையும் தீயிட்டுக் கொளுத்துவதன் மூலமும், ராக்கிங் என்ற நடவடிக்கை மூலம் சகோதரப் படுகொலைகளைச் செய்யும் ஒரு சமுகம் நிச்சயமாக அரசியல்வாதிகளுக்கெதிராக குரல் கொடுக்கும் தகுதியை இழந்து விடுகின்றது. பல்கலைக்கழகங்களில் கற்கும் காலம்வரை பொதுநலன் பற்றிச் சிந்திக்கும் இளைஞன் படிப்பை முடித்தவுடன் தனது தனிப்பட்ட வாழ்க்கையை நேசிக்கத் தொடங்குகின்றான். இந்த நிலையில் தொழிலொன்றை எந்த வழியிலென்றாலும் பெற்றுவிடவும், அதற்காக எதையும் செய்யவும் தயாராக இருப்பான். இவனுக்கு தொழிலுக்கான வழியை ஏற்படுத்தி சமுகத்தைவிட்டு அந்நியப்படுத்தி விட்டால் உனக்கெதிரான அவனது எழுச்சியை தணிக்க முடியும். அதற்கும் மேலாக அவன் தனது எழுச்சியைத் தொடரும்போது பல புதிய விடயங்களைப் பற்றிச் சிந்திக்க வேண்டும். இன்றைய கல்வி வெறும் சான்றிதழுக்கும், சில ரூபா சம்பளத்துக்குமான கல்வியாகவும் இருக்கும்வரை அரசியல்வாதிகள் சஞ்சலப்படத் தேவையில்லை. இருந்தாலும் இளைஞர்களின் கல்வியும் அவர்களுக்கு வழங்கப்படுகின்ற பயிற்சித்திட்டங்களும்

ஒழுங்குபடுத்தப்படாதுவிடின் அது தேசத்தின் ஒருமைப்பாட்டுக்கு என்றுமே பாதகமாக அமையும் என்பதை ஆட்சியாளர்கள் உணர்ந்து கொள்ளல் வேண்டும்.

ஒவ்வொரு நாட்டின் தன்மைக்கும், சூழலுக்கும், அரசாங்கத்தின் தன்மைக்கும் ஏற்றவிதத்தில் குடிமக்கள் பயிற்றுவிக்கப்படல் வேண்டும். இவ்வாறான பயிற்சிகளே இளைஞர்களிடத்தில் நற்பண்புகளை உருவாக்குவதற்கு உந்துசக்தியாகத் திகழ்கின்றது. பாடசாலைக் காலமாக இருந்தாலும் ஏனைய காலமாக இருந்தாலும் இளைஞர்களுக்கு வழங்கப்படுகின்ற கல்வியானது ஒரேமாதிரியானதாக அமைய வேண்டும். இவற்றுக்கிடையே காணப்படுகின்ற வித்தியாசம் வாழ்க்கைப்போக்கில் பாரிய மாற்றத்தினை இவர்கள் மனங்களிலே விதைத்துவிடுகின்றது. ஒவ்வொருவரும் தாம் விரும்பிய துறைகளில் கல்வி கற்க முடியும். என்றாலும் தேசம் பற்றிய, பொதுமக்கள் பற்றிய கல்வி எல்லோருக்கும் பொதுவானதாக அமையவேண்டும்.

ஒரு நாட்டில் பொதுமக்களுக்கிடையே காட்டப்படுகின்ற ஏற்றத்தாழ்வுகள் படிமுறை ரீதியாக வளர்ச்சியடைந்து பிரிவினைக்கும் வன்முறைக்கும் தூண்டுகோலாக அமைகின்ற அதேநேரம், இளைஞர்களுக்கிடையே ஒருவித வெறுப்பும் தோன்றுகின்றபோது தாம் தேசத்தின் ஒரு அங்கமா? என்ற சிந்தனை இளைஞர்களுக்கிடையே துளிர்விடத்





துவங்குகின்றது. இவ்வாறான நிலைமைகளிலிருந்து தம்மை விடுவிக்கவும், தற்காத்துக்கொள்ளவும் முற்படும் இளைஞர்களுக்கிடையே முரண்பாடுகள் என்ற விடயம் உருவாகி வலுப்பெறுவது தவிர்க்க முடியாததாகி விடுகின்றது.

எனவே நாட்டிலுள்ள மக்கள் அனைவரும் இன, மத, மொழி, பால், சமயம் என்ற வேறுபாடுகளுக்கப்பால் அனைவரும் அந்நாட்டு மக்கள் என்ற உணர்வுடன் சமமாக நடாத்தப்படல் வேண்டும். இதிலிருந்து ஆட்சியாளர்கள் தவறுகின்றபோது இதிலிருந்து விடுபடுவதற்கான ஒரேவழி புரட்சி என்ற ஒன்றைவிட வேறொன்றில்லை என்றாகிவிடுகின்றது. மேலும், அரசியல் சமத்துவத்தைக் கொண்டுவருவதற்கான சரியான வழியைக் காண வேண்டுமாகவிருந்தால் அது சோசலிசப் புரட்சியின் மூலமே சாத்தியமடைகின்றது என்பது இளைஞர்களால் முன்னெடுக்கப்பட்ட பல்வேறு போராட்டங்களிலிருந்து தீர்மானிக்க முடிகின்றது.

உலகில் ஒருபுறத்தில் இளைஞர்களின் மூலம் ஆட்சி மாற்றங்களும், நிர்வாகச்சீரமைப்பும், புதிய கொள்கைகளின் தோற்றமும், கண்டுபிடிப்புகளும் என மாற்றங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அதேநேரம், நான் முன்னே கூறியவாறு தன்போக்கில் வாழ்கின்ற இளைஞர்களால் என்ன ஆபத்து நமக்கு ஏற்பட்டுவிடப்போகின்றது என்று ஒரு ஆட்சியாளன்

இளைஞர்களை குறைவாக எடைபோட்டுவிடக் கூடாது. இளைஞர்களின் கருத்துக்களுக்கும் சிந்தனைகளுக்கும் வாய்ப்பளிக்க தவறுகின்றபோது முரண்பாடுகள் ஏற்படுகின்றன. முரண்பாடுகள் என்பது புரட்சியாக உருவாகி தீவிரமாக மாறும் என்று மட்டுமே அனேகர் எண்ணிக் கொண்டிருக்கின்றனர். முரண்பாடுகள் மூலம் சிறந்த தீர்வொன்றையும் பெறமுடியும். எந்தவிதமான கவலையுமின்றி சோம்பேறிகளாக வாழும் ஒரு சில இளைஞர்களை அடையாளப்படுத்தியே நான் ஆரம்பத்தில் கருத்துக் கூறியிருந்தேன். அதற்காக சகல இளைஞர்களும் இப்படித்தான் இருப்பார்கள் என்று எண்ணுவது தவறானது. இலங்கையில் 1971க்குப் பின்னர் மக்கள் விடுதலை முன்னணியைச் சேர்ந்த இளைஞர்கள் முன்னெடுத்த ஆட்சிக்கெதிரான புரட்சியை வன்முறை என்ற பெயரில் அடக்கியொடுக்க முயற்சிகள் முன்னெடுக்கப்பட்ட போதும், அது இன்று மறுபிறவியெடுத்து நாட்டின் ஆட்சியில் பங்காளி என்ற அந்தஸ்த்தை அடைந்துள்ளது. மேலும், எதிர்காலத்தில் நாட்டின் ஆட்சியையே கைப்பற்றிவிடக் கூடும் என்ற நிலையையும் தோற்றுவித்துள்ளது.

தோல்விகள் என்பது ஒரு பயணத்தின் முடிவல்ல. அது ஒரு பெரும் அத்தியாயத்தை எழுதும் எழுத்தாளன் இடும் கால் மாத்திரைகள் மட்டுமே. இதனை இளைஞர்கள் உணர்ந்து கொள்ளல் வேண்டும். ஒரு ஏழைக்குடும்பத்தில் பிறந்து, வளர்ந்து உலகில் நிலையான சரித்திரங்களைப் படைத்த எத்தனையோ பெருமக்களின் வரலாறுகளை நாம் கண்டிருக்கின்றோம். இந்தியாவில் தற்போதைய ஜனாதிபதியாகவிருக்கின்ற டாக்டர் அப்துல் கலாம் இந்திய வரலாற்றில் அணுசக்தித்துறையில் பல்வேறு சாதனைகளைப் புரிந்த விஞ்ஞானியாகவும் இருக்கின்றார். இவரின் வாழ்க்கை வரலாறு தற்போது உலகில் வாழ்ந்து கொண்டிருக்கின்றது. அப்படியிருக்க, தற்போதைய இளைஞர்கள் மட்டும் அரசியலில் எம்மால் சாதிக்க முடியாது என்று ஏன் நினைக்கின்றனர்? நாம் கல்வி கற்கவேண்டும் என்ற நோக்கில் முயற்சி செய்கின்றபோது அது அத்தனை தடைகளையும் தாண்டி பல்கலைக்கழகம் வரை நம்மைக் கொண்டு செல்கின்றது. அதேநேரம் அரசியல் என்ற தளத்தில் கால் பதிக்காமலேயே ஒரு இளைஞனால் அரசியலில் தன்னால் தாக்குப்பிடிக்க முடியாது என்ற முடிவுக்கு மட்டும் எப்படி வர முடிகின்றது.





வாழ்க்கையின் எந்தவொரு பகுதிக்கும் இரண்டு பக்கங்கள் இருக்கின்றன. வாழ்க்கை என்பது பிறப்புக்கும் இறப்புக்குமிடையிலான இடைவெளி. இதில் ஒவ்வொருவரும் இன்பமாக வாழ வேண்டுமென்றே ஆசைப்படுகின்றனர். இக்காலப்பகுதிக்குள்ளேயே அத்தனை சாதனைகளையும் செய்துமுடித்து சரித்திரமாகின்றனர். ஒருவர் வாழ்வது அவருக்கு இன்பமானது என்பதற்காக நாமும் அவரைப் போன்றே வாழவேண்டும் என்ற நிபந்தனை இல்லை. நம்முடைய வாழ்க்கை நமக்கின்பமாக இருந்தால் அதுதான் சிறந்தது.

உலகம் இளைஞர்களின் கைகளிலேயே உள்ளது என்ற வார்த்தைக்கு எதிர்வார்த்தை கிடையாது. எம்மோடு வாழ்கின்ற ஒருவரின் அடிப்படை உரிமை, சுதந்திரம் என்பன பாதிக்கப்படுகின்றபோது அதிலிருந்து அவரை விடுவித்து சுதந்திரமான பிரஜையாக அவரை வாழவைப்பதற்கு, அவருக்காக நியாயம் கேட்பதற்கு முன்வர இளைஞர்கள் தயக்கம் காட்டுகின்றனர்.

ஒரு கிரிக்கட் போட்டியின்போது தனது விருப்பத்துக்குரிய அணி தோற்றுவிடக்கூடாது என்ற எண்ணத்தோடு தொலைக்காட்சியைப் பார்த்துக் கொண்டிருக்கும் இளைஞன் தனது அணி தோல்வியடையும்போது உயிரை விடவும் தயங்குவதில்லை. அதேநேரம் விளையாடிய இரு அணி வீரர்களும் பரஸ்பரம் புரிந்துணர்வுடன் கைலாகு கொடுத்துவிட்டே மைதானத்தை விட்டு வெளியேறுகின்றனர். இந்தப் புரிந்துணர்வு என்பது விளையாட்டின் சட்டதிட்டங்களை இரு அணி வீரர்களும் புரிந்துகொண்டதனால் ஏற்பட்டதாகும். அதே சட்டதிட்டங்களையும் அடிப்படையையும் இரசிகனான இளைஞன் முறையாகத் தெரிந்து கொள்ளாததன் விளைவு அவனை தற்கொலைக்குத்- தூண்டியுள்ளது.

ஒருநாட்டின் பௌதீக, அரசியல், சட்டத்தன்மையின் பெறுமானம் என்னவென்பதை அந்நாட்டின் பிரஜைகளான இளைஞர்கள் புரிந்து கொள்ளல் வேண்டும்.





புரிந்துகொள்ளாததன் நிலையானது நாமும் தற்கொலை செய்வதற்கு ஒப்பானதாகும். அரசியலில் சீரற்ற தன்மை காரணமாக இன்று உலகில் எங்குமே முரண்பாடுகள் தோன்றி யுத்தமும், கிளர்ச்சிகளும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகின்றன.

பாதிக்கப்பட்ட மக்கள் எந்த வகுப்பினராக இருந்தாலும் அவர்கள் அந்நாட்டுக் குடிமக்கள். எனவே ஏனைய மக்கள் அனுபவிக்கின்ற சலுகைகளையும், உரிமைகளையும் அனுபவிக்கும் தகுதி பாதிக்கப்பட்ட மக்களுக்கு உண்டு என்பதை ஆட்சியாளர்கள் உணர வேண்டும். இல்லையேல் இளைஞர்கள் அதைத் தட்டிக்கேட்டு உரியவர்களுக்கு நிவாரணம் பெற்றுக்கொடுக்க தயங்கக் கூடாது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு நியாயமான அதிகாரங்கள் வழங்கப்படல் வேண்டும்.

இளைஞர்களின் நடவடிக்கைகளாலும் சமுக, பொருளாதார, அரசியல் நடவடிக்கைகள் மூலமுமே உலகெங்கும் கிளர்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. இலங்கையில் சுதந்திரத்துக்குப்பிற்பட்ட காலங்களில் ஏற்பட்ட கிளர்ச்சிகளை நாம் நோக்குகின்றபோது அது அரசியலில் ஏற்பட்ட மாறுபட்ட தன்மைகளின் விளைவாக ஏற்பட்டதென்றே கூறத்தோன்றுகின்றது.

ஜனநாயகம் என்ற போர்வையில் இடம்பெற்ற

சர்வாதிகார நிலையை இலங்கை அனுபவத்தின் மூலம் நாம் உணர்ந்துகொள்ள முடிகின்றது. தமிழ் அரசியல் தலைவர்கள் ஜனநாயகத் தன்மைகளின் ஊடாக பாராளுமன்றத்தினூடாகப் பெற்றுக்கொள்ளத் துடித்த சமுகவிடுதலை என்பது விடுதலைப் புலிகள் என்ற இளைஞர் அமைப்பின் ஊடாக புரட்சியாக வெடித்து தற்பொழுது இருதரப்புப் பேச்சுவார்த்தை என்ற கட்டத்தை எட்டியிருக்கின்றது. அதற்காக பாராளுமன்றத்தினூடாக ஒரு சமுகம் தனது உரிமையை பெற்றுக்கொள்ள முடியாது என்பது பொருளல்ல. இருந்தாலும், அரசியல் அதிகாரத்தை அரசியலூடாகவும் இராணுவப்பலத்தின் மூலமும் பெறமுடியும் என்பது இங்கு புலனாகின்றது. இதற்கு மக்கள் விடுதலை முன்னணியும் ஒரு சிறந்த உதாரணமாகத் திகழ்கின்றது. கட்சிகள் கொள்கைகளின் மீது கட்டியெழுப்பப்படல் வேண்டும். ஆட்சியாளன் என்பவன் மக்களின் எண்ணங்கள், அபிலாஷைகள் என்பவற்றின் மொத்த வடிவமாக இருக்க வேண்டும். இதிலிருந்து தவறுகின்றபோது இளைஞர்களின் நடவடிக்கைகள் புரட்சியாக மாறி, தீவிரவாதமாக வளர்ச்சியடைகின்றது.

தற்கால இளைஞர்களைப் பொறுத்தவரை, இரண்டு அரசியல்வாதிகள் முன்வைக்கின்ற கருத்துக்களை ஒருவர் சரி; மற்றவர் பிழை என்ற விவாதங்களுக்கு அதிக நேரத்தை செலவிடுகின்றவர்களாகவே காணமுடிகின்றதே தவிர, இருவரது கருத்துக்களிலிருந்தும் ஒரு பொதுவான





நிலைப்பாட்டுக்கு வந்து, பொதுமை காணும் பண்புகளிலிருந்து தவறுகின்றவர்களாகவே இளைஞர்களைக் காண முடிகின்றது. இதனால்தான் இவ்வத்தியாயத்தின் ஆரம்பத்தில் இளைஞர்களைப் பற்றி அப்படிக் கூறவேண்டியேற்பட்டது.

தம்மால் கூறப்படுகின்ற கருத்துக்கள் இந்நாட்டில் என்ன தாக்கத்தை ஏற்படுத்தப்போகின்றது என்ற ஏனோதானோ மனப்பாங்கைப் போக்கி தன்னம்பிக்கையுள்ள இளைஞர் சமுதாயத்தை உலகுக்கு வழங்கவேண்டிய காலம் நெருங்கிக் கொண்டிருக்கின்றது. கற்கின்ற கல்வியானது நடைமுறையில் பரீட்சித்துப் பார்க்கப்படாதவிடத்து எல்லோராலும் இலகுவாகக் கையாளப்படக் கூடிய கைப்பொம்மைகளாக இளைஞர்கள் மாற்றப்பட்டு விடுவர்

தமது கருத்துக்களுக்கு சரியான நியாயம் கோரி விளக்க முடியுமாக இருந்தால் அக்கருத்து நிச்சயம் உள்நாட்டிலும் சர்வதேச அரங்கிலும் தாக்கத்தை விளைவிக்கும். கல்வியிலும், பொருளாதாரத்தைப் பெருக்குவதிலும், தொழில்நுட்ப முன்னேற்றங்களிலும், கண்டுபிடிப்புக்களிலும் இளைஞர்களால் முன்வைக்கப்பட்ட எத்தனையோ மாற்றுக்கருத்துக்கள் கூடுதல் பங்களிப்புக்களைச் செலுத்தியிருக்கின்றன. அதேநேரம் நாட்டை இயக்குகின்ற ஆட்சித்துறை இயந்திரம் மாத்திரம் ஓட்டை வண்டியாக பின்னோக்கிச் செல்கின்றது. இதிலும்

இளைஞர்கள் தமது முழுமையான பங்களிப்பைச் செலுத்த முன்வருகின்றபோது, பழைமையில் புதுமை காணமுடியும்.

அரசியல் என்பது தீண்டத்தகாத பண்டமுமல்ல; வாரிசுரிமைச் சொத்துமல்ல. கணவனுக்குப்பின் மனைவியும், தந்தைக்குப்பின் மகனும் என அது தொடர வேண்டுமென்ற நிபந்தனைகள் எதுவுமில்லை.

சமுகத்துக்காக உழைக்கும் ஒருவருக்குக் கிடைக்கும் பதவியுயர்வாகவே அரசியல் அதிகாரம் அமைய வேண்டும். அதைவிடுத்து சமுகக் கடமைகளிலிருந்து விலகியிருந்த ஒருசாரார் தமக்கிருக்கும் பொருளாதார பலம், செல்வாக்கு என்பவற்றை மாத்திரம் அடிப்படையாக வைத்து ஒரு சமுகத்தை நிருவகிப்பதற்கு அனுமதிக்க முடியாது.

அரசியலில் புதிய கருத்துக்களின் தாக்கம் குறைவடைந்து கொண்டு செல்கின்றபொழுது அது அடிமைமுறை சமுதாயத்தை உலகில் தோற்றுவிக்கின்றது. தந்தை-மகன் என அரசியல் அதிகாரம் வாரிசுரிமைச் சொத்தைப்போல் கைமாறிச் செல்கின்றபோது அது குடிமக்களின் இயல்பு வாழ்க்கையை கீழ்நிலைக்குக் கொண்டு செல்கின்றது.

மக்களுக்கிடையே ஏற்றத்தாழ்வும், ஆட்சியாளர்களுக்கும் மக்களுக்குமிடையே இடைவெளியும்





அதிகரிக்கின்றபோது மக்களிடையே அதிகாரம் கூடுதல் செல்வாக்குச் செலுத்தும். தமக்குரிய பங்கை பெறமுடியாத குழுக்கள் இராணுவ பலத்தை பிரயோகிப்பதன் ஊடாக அவற்றை அடைய முனைகின்றது. இதன் விளைவு பிற்காலத்தில் படுகொலைகள் மூலமும், நாட்டில் தாக்குதல்களை நிகழ்த்துவதன் மூலமும் அதிகாரத்தைப் பெறுவதை சாத்தியமாக்க முயல்கின்றது.

இந்த நிலையிலிருந்து விடுபடத் துடிக்கும் ஒரு குழு தமது திட்டத்தை அமுல்படுத்துவதற்காக போராட்டங்களை நடாத்துகின்ற அதேகாலப்பகுதியில் தமது போராட்டத்தின் நியாயங்களை சமாதானமான வழியில் கருத்தரங்குகளை ஏற்பாடு செய்து தமது நோக்கம், எதிர்பார்ப்பு தொடர்பான சாதகமான நிலைமைகளை மக்களுக்கு உடனுக்குடன் தெரிவிக்க வேண்டும். அவற்றோடு இணைந்து ஒரு குழுவை ஆட்சியியல் தொடர்பான கற்கைகளுக்கும் தயார்படுத்த வேண்டும்.

அமைதியைப் பற்றிச் சிந்திக்கின்ற குழு அமைதியை ஆயுதத்தின் மூலமே பெறமுடியும் என்ற சிந்தனையோடுதான் போராடத் தயாராகின்றது. இந்நிலை ஒரு கட்டத்தை அடைகின்றபோது ஆட்சியைக் கொண்டுநடாத்துவதற்கு பயிற்சி பெற்ற ஒரு குழுவும் அவசியமாகின்றது. இளைஞர்கள் பல்வேறு குழுக்களாக செயற்படுகின்றபோதிலும் அவர்களுக்கிடையே

கருத்தொருமைப்பாடு சரியாக அமையாதது பெருங்குறைபாடாக உணரப்படுகின்றது.

இளைஞர் குழுக்களை கையாள நினைக்கின்ற அரசானது பாடசாலைக் காலங்களிலேயே தேசிய ஒருமைப்பாட்டுக்கான கல்வி, சமய விழிப்புணர்வு என்பவை தொடர்பாக சமமான முறையில் பயிற்றுவிக்க வேண்டும். இதன் மூலம் ஆட்சிக்குத் தயாராக இளைஞர் சமுதாயம் ஆயத்தப்படுத்தப்படல் வேண்டும். இல்லையேல் யுத்தம் என்பதும், தீவிரவாதம் என்பதும் தவிர்க்க முடியாதவைகளாக மாறிவிடும். பின்னர் சந்தேகங்களும், அச்சமும், கடந்தகால அனுபவங்களும் பிரச்சினைகளுக்குத் தீர்வை எட்டுவதில் தொடர்ந்தும் தடைக்கற்களாகவே திகழும்.

எனவே, அமைதியை விரும்புகின்ற தேசம் இளைஞர்கள் விடயத்தில் கூடுதல் கவனம் செலுத்துதல் வேண்டும். அவர்களுக்கிடையே பக்கச்சார்பு, பாகுபாடுகள் காண்பித்தல் என்பவற்றைத் தவிர்த்து சமஅந்தஸ்த்தை வழங்க வேண்டும். அதேநேரம் இளைஞர் சமுகம் அவற்றை அடைந்துகொள்ளத்தக்கவாறு தம்மையும் புதிய சிந்தனைகளோடும் தன்னம்பிக்கைகளோடும் வளர்த்துக் கொள்ளல் வேண்டும்.

உலகில் தோன்றிய எந்தவொரு மதமும் அல்லது சமயமும் அவ்வக் காலத்தில் வாழ்ந்த மக்களை நல்





வழிப்படுத்தவேயன்றி தோன்றவில்லை. நபி (ஸல்), புத்தர், இயேசு போன்ற எந்தவொருவரும் மக்களுக்கு நல்வழியையே போதித்தனர். யாரும் எந்தவொரு நிலையிலும் அநியாயமாக மனித உயிர்கள் கொல்லப்படுவதை விரும்பவில்லை. எல்லாச் சமயங்களும் ஒழுக்கத்தையே போதிக்கின்றன. சகலதையும் மனிதன் என்ற வரையறைக்குள்ளேயே சமயங்கள் நோக்குகின்றன. ஆனால் மனிதர்கள் மத்தியில் சமயங்கள் பற்றிய அறிவு மிகவும் அரிதாகவே காணப்படுகின்றது. சமயத்தைக் கற்பதை மனிதன் மிகவும் வெட்கக் கேடான செயல் என்று கருதுமளவுக்கு நிலைமை வளர்ந்து வருகின்றது. நீண்ட காலத்தில் அது அப்படியே ஆகியும் விடலாம்.

ஒவ்வொரு சமயத்தவரும் அது போதிக்கின்ற கருத்துக்களுக்கு முக்கியத்துவம் வழங்குவதை விடுத்து சமயங்களின் பெயர்களுக்கே முக்கியத்துவம் கொடுக்கத் தலைப்பட்டுள்ளனர். இதனால்தான் பல்வேறு சமயக் குழுக்கள் உலகில் நாளுக்கு நாள் தோன்றி மறைந்து கொண்டிருக்கின்றன. சமயத்தின் பெயரால் கொலைகள் அதிகரித்துவிட்ட நிலையில் சமயங்களுக்கிடையேயான மேலாதிக்கம் அரசியல்வாதிகளுக்கு சிறந்த களமாக அமைந்துள்ளதை நாம் காணலாம்.

பல்வேறு சமயங்களுக்கிடையிலான பிளவுகள் என்ற நிலை மேலும் ஒருபடி முன்னேறி ஒரு சமயத்துக்குள்ளேயே பல்வேறு பிரிவுகள் தோன்றியிருப்பது

எந்தவொரு சராசரி மனிதனாலும் ஏற்றுக் கொள்ள முடியாது. இருந்தாலும், அரசியல்வாதிகள் அதனைக் கண்டுகொள்ளக் கூடாது. எந்தவொரு பிரிவுக்காகவும் தனது தனிப்பட்ட கருத்துக்களை தெரிவிக்காத, அதேநேரம் எந்தவொரு குழுவுக்கும் சார்ந்தவராகவும் தன்னை அடையாளப்படுத்தக் கூடாது. ஒரு குறிப்பிட்ட பிரிவினரின் செயற்பாடு தனக்குப் பிடிக்கவில்லை என்றாலும்கூட, அவர்களைச் சந்திக்கும்போது உங்களது கொள்கையைவிட உயர்ந்தது உலகில் இல்லை என்ற ஒரு பொய்யை தைரியமாகக் கூறிவிடு. அது அவர்களை மிகவும் திருப்திப்படுத்தும்.

மதவாதிகள் இன்று உலகையே ஆட்டிப்படைக்கும் ஒருசாராராக மாறிவருகின்றனர். இவர்கள் மக்களை உலகில் சொர்க்கத்தை அனுபவிக்கக் கூறுகின்றனர். அல்லது மரணத்தின் பின்னர் சொர்க்கத்தை அனுபவிக்குமாறு கூறுகின்றனர். எது எப்படியிருந்தாலும், வாழ்வை இன்பமாகக் கழித்தல் என்பதே இங்கு பிரதான அம்சமாக இருக்கின்றது.

ஒருவரை இம்சைக்குள்ளாக்கி வாழ்வதுதான் சந்தோசமான வாழ்வா? என்பதை இங்கு நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். இருந்தாலும், ஹிட்லர் மேற்கொண்ட படையெடுப்புக்களைவிட மோசமான ஒரு நிகழ்வுதான் அமெரிக்கா ஜப்பானின் ஹிரோஷிமா, நாகசாஹி போன்ற இடங்களில் நடத்திய தாக்குதல்களும்,





தற்போது ஈராக் உட்பட வளைகுடா நாடுகளில் மேற்கொண்டுவரும் தாக்குதல்களும் ஆகும். இதன் மூலம் உலகம் நாளுக்கு நாள் இரத்தக் களரியைச் சந்திக்கின்றது. இவர்களைக் கேட்டால் மக்களின் நிம்மதிக்கும் உலகில் சமாதானத்தை கொண்டுவருவதற்குமே இவ் யுத்தம் என்கின்றனர்.

ஒருநாள் யுத்தம் நிறுத்தப்படும்போது மக்கள் மனங்களில் ஏற்படுக்கின்ற சந்தோசமே உண்மையான சமாதானத்தின் அறிகுறிகள் என்பதைப் பற்றி அரசியல்வாதிகள் அதிகம் அலட்டிக் கொள்ளத் தேவையில்லை. ஆகவே, அரசியலும், மேலாதிக்கமும் என்ற நிலைமைகளைக் காணவிரும்புகின்ற ஒருவன் சமாதானத்தை ஏற்படுத்தவது என்ற போர்வையில் கொலைகளையும் செய்ய முடியம் என்பது எழுதாத ஒரு வழக்கமாகி வருகின்றது.

எனவேதான் அரசியல்வாதி பாவ புண்ணியங்களைப் பற்றிக் கவலைப்படாமல் தமது செயற்பாடுகளை முன்கொண்டு செல்கின்றான். இதற்கு சரியான தீர்வாக சமய சித்தாத்தங்கள் காணப்படுகின்ற போதிலும், சமயங்களின் பெயராலேயே யுத்தங்கள் என்ற நிலை தோன்றிவிட்ட காலப்பகுதியில் தமக்குப் பிடித்தாலும, பிடிக்காவிட்டாலும் சமயக் குழுக்களை ஆதரிப்பதை அரசியல்வாதிகள் பழக்கமாகக் கொண்டுள்ளனர். இன்று சகலருக்கும் தேவையானது பணம் என்ற ஒரு விடயமே.

எனவே சமயவாதிகளுக்கும் இது முக்கியமானதாகையால் அவற்றை அதிகமாக வழங்குவதன் மூலம் சமயவாதிகளை திருப்திப்படுத்த முடியும்.

இதனால்தான், அதிகமான சமயக் குழுக்களையும் அதன் உறுப்பினர்களையும் அரசியல்வாதிகள் தமது கைப்பொம்மைகளாக உபயோகிக்கின்றனர். அரசியல்வாதிகளைவிட உயர்ந்த கண்ணியம் சமயத் தலைவர்களுக்குக் காணப்படுகின்றபோதிலும், தம்மை விட அரசியல்வாதிகளே உயர்வானவர்கள் என இந்தச் சமயத் தலைவர்கள் கருதுகின்றனர். அரசியல்வாதிகளின் தவறுகளுக்கு சரியான தண்டனை வழங்கக் கூடிய ஒரே தகுதி சமயப் பெரியார்களுக்கே உரியது. ஆனால், இன்று அவர்களும் அரசியல் மேடைகளிலே அமர்ந்து அரசியல்வாதிகளுக்கும் அவர்களின் தவறுகளுக்கும் நியாயம் கற்பிக்கின்றனர். அரசியல்வாதிகளின் தவறுகளுக்கும், சர்வாதிகாரத்துக்கும் துணைபோகின்றவர்களாக சமயப் பெரியார்கள் மாறிவருவது உலகில் யாராலும் ஏற்றுக் கொள்ள முடியாத மனவேதனையான விடயமாகவுள்ளது.

இதனால்தான் மக்களின் சமய அடிப்படைவாதத்தை அரசியல் கோசங்களாக அரசியல்வாதிகள் மாற்றியுள்ளனர். தமது பிரச்சார சுவரொட்டிகளில் சமயக் கருத்துக்களைப் பொறித்து அவற்றை பொது இடங்களில் ஒட்டி தனது சுவரொட்டிகளுக்கு தானே சாணிகளைப்





பூசிவிட்டு பழியை எதிர்த்தரப்புமீது சுமத்தி அரசியல் இலாபம் தேடிய, தேடி வருகின்ற ஒரு சமுக அரசியல் அமைப்பை இந்தக் காலப்பகுதிகளில்தான் காண முடிகின்றது. இப்படியான செயல்களுக்குக்கூட சமயப் பெரியார்கள் என்று கூறிக்கொள்ளும் சிலர் ஆதரவுப் பிரச்சாரம் செய்கின்றனர். இதனால் யானை தனது தலையிலே சேற்றை வாரிப் போடுவதுபோல் சில சமயப் பெரியார்கள் தமது கண்ணியத்தை இழந்து வருகின்றனர்.

சமயத்தைவிட அரசியல் மேலானது, சமய அறிஞனைவிட அரசியல்வாதி மேலானவன் என்ற கருத்து மேலோங்கி வருகின்றது. இது மக்களின் முட்டாள்தனத்தின் வெளிப்பாடா? அல்லது தாம் பிழையாக சமயவாதிகளால் வழிநடாத்தப்படுகின்றோம் என்பதை மக்கள் உணரவில்லையா? என எண்ணத் தோன்றுகின்றது.

அரசியல்வாதிகள் தமக்கிருக்கும் புத்திசாலித்தனத்தையும் அறிவையும் பொதுமக்களை ஏமாற்றுவதற்கும், தமது சொந்த வாழ்வின் விருத்திக்கும் உபயோகிக்கத் தொடங்கினால், தமது தேவையை நிவர்த்தி செய்ய மக்களிலிருந்து ஒரு குழு வெளிப்படுவதை யாராலும் தடுக்க முடியாமல் போய்விடும். இறுதியில் இந்த ஏமாற்று அரசியல்வாதிகளை துரோகிகள் என அடையாளம் கண்ட அக்குழு, பழிவாங்கல்களில் ஈடுபடுவதன் மூலம் அரசியல்வாதிகளை அடிமைப்படுத்தி தமது போராட்டத்தை முன்னெடுக்கும். இந்தக் குழுவிடம்

கல்வி இருக்கிறதா? தகுதி இருக்கிறதா என்ற கேள்வி மேலோங்கி நின்றாலும் அரசியல்வாதிகளிடமிருக்கும் கல்வியறிவை விட இவர்களிடம் சமுக உணர்வு மேலோங்கியிருக்கும். ஒரு சமுகத்தை விடுதலைப் பாதைக்குக் கொண்டு செல்வதற்கு முதலில் சமுக உணர்வுதான் பிராதான பங்கு வகிக்கும். அந்த உணர்வுள்ள ஒருவனால்தான் சமுகத்தை வழிநடாத்த முடியும்.

இந்த நடவடிக்கைகள்தான் இளைஞர்களை ஆயுதப் போராட்டங்களுக்குத் தூண்டி, இரத்தக்கறை படிந்த வரலாற்றை உலகெங்கும் தோற்றுவித்தது. ஒரு நாட்டில் அரசியல்வாதிகளாக இல்லாதவர்களும் ஆயுதக்குழுக்களிலும் ஆயுதங்களிலும் நம்பிக்கை வைக்காத மூன்றாவதொரு குழுவின் தேவை இன்றியமையாததாகவுள்ளது. இது அமுக்கக்குழுக்கள் என அழைக்கப்பட்டாலும் இக்குழுக்கள்கூட பின்னர் அரசியல் கட்சிகளில் சங்கமித்து விடுகின்றனர்.

எது எப்படியிருந்தாலும் மூன்றாம் தரப்பின் தேவையொன்று தற்கால அரசியலுக்கு இன்றியமையாதது. இது கற்ற, புத்திஜீவிகளைக் கொண்ட அமைப்பாக இருப்பதே மிகவும் விரும்பத்தக்கதாகும். இது அரசியல்வாதிகளை வழிநடாத்தும் ஆலோசனை சபை போன்று செயற்பட வேண்டும். அரசியலிலும் சரி; போராட்டங்களுக்கும் சரி ஒரு சமநிலைத்தன்மை





பேணப்படல் வேண்டும். அது நிச்சயம் இப்படியான புத்திஜீவிகளைக் கொண்ட மூன்றாவது சக்தியின் மூலமே சாத்தியமாகும். இது நிச்சயம் கடந்த காலங்களில் அரசியலில் சங்கமித்துப்போன அமுக்கக் குழுக்கள் போலல்லாமல் சமயப் பெரியார்களையும் உள்ளடக்கிய செனட் சபை போன்று இயங்க வேண்டும்.

ஆனால், இன்று சமயப் பெரியார்கள் தமது நடவடிக்கைகள் மூலம் அரசியல்வாதிகளின் ஊதுகுழல்களாக தம்மை அடையாளம் காட்டுவதை விடுத்து தம்மை மக்களுக்கு சரியான பாதையைப் போதிக்கும் போதகர்களாக மட்டுமே இனங்காட்டத் தவறும் காலம்வரை உயிர்க் கொலைகளை தவிர்க்க முடியாது. ஒருவன் எவ்வளவு கற்றவனாக இருந்தாலும் தான் சார்ந்திருக்கின்ற எந்த சமயமாக இருந்தாலும், சமய அறிவு அவனிடமில்லையென்றால் நிச்சயமாக அவனால் சிறந்த ஆட்சியாளனாக மிளிர முடியாது. இதை உணர்ந்துதானோ என்னவோ ஈரானில் சமயத் தலைவர்கள் அந்நாட்டை நிருவகிக்க முற்பட்டுள்ளனர். அங்கு மக்களாட்சி சிறப்பாக இருக்கின்றது.

ஓரளவு புத்திசாலியான சமயத் தலைவர்கள் அரசியல்வாதிகளின் கைபொம்மைகளாக இருப்பதை விடுத்து நேரடியாகவே அரசியலில் பிரவேசித்து வருகின்றனர். இது ஏற்கனவே அரசியலில் இருந்தவர்களின் எதிர்ப்பைச சம்பாதித்துள்ளபோதிலும் ஒரு நீதியான

ஆட்சியை இச்சமயத் தலைவர்களால் கொண்டுவர முடியுமென்றால் அது பாராட்டத்தக்கது. அதேவேளை, சமயத்தின் பெயரால் ஒரு யுத்தம் வெடித்தால் அதன் விளைவு படுபயங்கரமானதாக இருக்கும். இருந்தாலும், அரசியல்வாதிகள் தமது இருப்பை தக்கவைத்துக்கொள்ள பயன்படுத்தும் சாதனங்களிலொன்றாக உயிரிழப்புகள் காணப்படுகின்றன என்பதை யாராலும் மறுக்க முடியாது. இதில் செய்தி என்னவென்றால், சமயத் தலைவர்களை தமது ஊதுகுழல்களாகப் பயன்படுத்தியவர்கள்தான் அரசியலில் வெற்றியும் கண்டிருக்கின்றனர்.

ஒவ்வொரு நாட்டிலும், நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலும் வாழும் மக்கள் புவியியல் ரீதியில் பல்வேறு சாதக பாதகங்களைக் கொண்டிருப்பர். அதனைக் காரணமாகக் காட்டி தம்மைப் பிரதேச ரீதியாக வேறுபடுத்துவதன் மூலம் சில சக்திகள் தமது மேலாதிக்கத்தை பிறிதொரு மக்கள் குழுவிற்கெதிராகச் செலுத்துவதை நாம் அவதானிக்கலாம். இந்த நிலமை தொடர்வதனால்தான் பல அரசியல்வாதிகளின் வாழ்க்கை வளமுள்ளதாகவிருக்கின்றது. இது உனது அரசியல் வாழ்விலும் விதிவிலக்காக மாறிவிடக் கூடாது. நீ மாற்ற நினைத்தால் மக்கள் உன்னை மாற்றி விடுவர்.

பொதுவாக, அரசு என்பது பல்வேறு வரைவிலக்கணங்களைக் கொண்டு நோக்கப்பட்டாலும்கூட "ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதிக்குள் வாழ்கின்ற மக்கள்





தமக்கான சட்டவாக்கலை மேற்கொள்ளும் நிறுவனமாக அரசாங்கமொன்றை ஆக்கிக் கொள்கின்றபோது அம்மக்கள் மனதில் தோன்றுகின்ற எண்ணம்தான் அரசு". இந்த அரசுகள் கொண்டிருக்கின்ற பிரதான மூலக்கூறுகளில் ஒன்றாகவே நிலப்பரப்பு காணப்படுகின்றது. ஒரு அரசு அமைக்கப்படுவதற்கு நிலப்பரப்பு பிரதானமாகும். அது நிலம், நீர், ஆகாயம், கடல், மலை உட்பட கனிய வளங்கள் அனைத்தையும் கொண்டிருக்கின்றது. இதற்கிடையிலான வேறுபாடுகள் ஒருநாட்டுடன் ஒப்பிடும்போது இன்னுமொரு நாட்டில் வளம் கூடியோ அல்லது குறைந்தோ காணப்படுகின்றது,

வளம் கூடிய பிரதேசத்தவர்களின் பக்கம் வளம் குறைந்த பிரதேச மக்கள் பிழைப்புக்காக செல்கின்றபோது அங்கு மேலாதிக்கம் தலைதூக்குகின்றது. வளம் கூடிய நாடுகள் ஏனைய நாடுகள்மீது செல்வாக்குச் செலுத்துகின்றன. இதில் பணம் என்கின்ற விடயம் பிரதான பங்கு வகிப்பதனால்தான் பணம் படைத்தவர்கள் பணம் படைக்காத மக்களை தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முற்படுகின்றனர். இதன் முன்னேற்றகரமான அம்சமாகத்தான் பணம் படைத்தவர்கள் ஆட்சியாளர்களாக மாறுவதும், மக்கள் அவர்கள் கால்களில் மண்டியிட்டுக் கிடப்பதும். எனவே, பிரதேசங்களுக்கிடையிலான வேறுபாடுகள் களையப்பட வேண்டியது. இந்த நிலைப்பாடு பேச்சளவில் அரசியல்வாதிகளிடம் காணப்பட்டாலும் அவர்கள் அதை செயற்படுத்தாமல் விடுவதற்கும் பிரதான

காரணம் இந்தப் பிரிவு அவர்களுக்கு சாதகமான நிலைமையைத் தோற்றுவித்து விட்டதுதான்.

ஒரு குறிப்பிட்ட நாட்டில் பல்வேறு மொழிகளைப் பேசும் மக்கள் காணப்படுவர். குறிப்பாக இந்தியாவை நோக்குகின்றபோது அங்கு சுமார் 3000க்கும் அதிகமான மொழிகள் வழக்கில் உள்ளதுடன் 25க்கும் மேற்பட்ட மொழிகள் உத்தியோக மொழிகளாகவுள்ளன. ஆசிய நாடுகளைப் பொறுத்தவரை சுமார் 4000 மொழிகள் இருக்கின்றன. மொழிரீதியாக பிரிந்து வாழத் தொடங்கினால் ஆசிய நாடுகள் 4000 நாடுகளாக பிரிந்து விடும். மொழி என்பது ஒரு தகவல் தொடர்புச் சாதனமாகவே காணப்படுகின்றது. எமது உள்ளுணர்வுகளை இன்னுமொருவருக்கு அப்படியே தெரிவித்துக் கொள்ள எமக்கிருக்கின்ற ஒரு ஊடகமாகவே மொழி செயற்படுகின்றது. இன்று உலகில் ஆதிக்கம் செலுத்துகின்ற ஒரு மொழியாக நாம் ஆங்கிலத்தைக் கூறலாம். இதற்குப் பிரதான காரணம் உலகமயமாக்கல் எனலாம்.

அதிகளவு கண்டுபிடிப்புகள் மேலைத்தேய நாடுகளிலேயே நிகழ்கின்றன. அவை பிறிதொரு நாட்டுக்குக் கொண்டுசெல்லப்படுகின்றபோது அக்குறிப்பிட்ட நாட்டு மக்கள் கண்டுபிடிப்பு நடைபெற்ற நாட்டினுடைய மொழியில் போதிய தேர்ச்சியற்றவர்களாகக் காணப்பட்டால் புதிய பொருள் பற்றிய விளக்கங்களை





அவர்களால் புரிந்து கொள்ள முடியாது போய்விடும். இதனால்தான் இன்று சகலரும் ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளை கற்பதில் ஆர்வம் செலுத்துகின்றனர். இந்தச் சிறிய விடயத்தைக்கூட விளங்க முடியாதவர்களால்தான் மொழியை அடிப்படையாகக் கொண்டு வன்முறைகள் தூண்டிவிடப்படுகின்றன. இதனைத் தூண்டுகின்றவர்கள் பிற்காலத்தில் தேசிய தலைவர்களாகி விடுகின்றனர். உனக்கு ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகள் தெரியாது என்பது ஒரு பிரச்சினை அல்ல.

பல மொழி தெரிந்தவர்கள் என்று கூறுபவர்கள்கூட மொழியை அடிப்படையாக வைத்து சமுகத்துக்காக ஏதாவது செய்திருக்கின்றார்களா? என்றால் அதுவுமில்லை. உலகில் மூன்றிலொரு பங்கு மக்களைக் கொண்டுள்ள சீன நாட்டுத் தலைவர்கள் தமது மொழியிலேயே சகல தொடர்புகளையும் மேற்கொள்கின்றனர். ஆங்கிலம் சர்வதேச மொழி என்கின்றனர். அது தெரிந்திருக்க வேண்டியது அவசியம்தான். தெரியவில்லை என்பதற்காக நாம் ஆங்கிலேயரைப்போல் உடுக்காமல் விடுகின்றோமா? அல்லது வாழாமல் விடுகின்றோமா? ஐரோப்பிய நாடுகளில் மலசலகூடத் தொழிலாளிகூட ஆங்கிலம்தான் பேசுகின்றான். அதற்காக எமது நாட்டில் அவர்களையெல்லாம் ஆட்சியாளர்கள் என்று கூறலாமா? உன்னிலிருந்து அவர்களைப் பிரித்துக் காட்ட வேண்டும் என்பதற்காக மொழியை ஒரு ஆயுதமாக பிறர் கூறக்கூடும். ஏதோவொரு வகையில் தானும்

தலைவன்தான் என்பதற்காக மொழி ரீதியான பிரிப்பின் மூலம் பிழைப்பு நடாத்துகின்றனர் சில தலைவர்கள்.

ஆசிய நாடுகளைப் பொறுத்தவரையில், மொழியின் பெயரால் பல்வேறு அழிவுகளைச் சந்தித்த நாடுகள் பல இருக்கின்றன. இவ்வணர்வு பல நூற்றாண்டுப் பழமைவாய்ந்தது. எனவே மொழி ரீதியான பிரிவுகள் எம்மால் வெறுக்கத்தக்கதொன்றாக காணப்பட்டாலும், சுயநலம் என்று வருகின்றபோது அதை ஆதரிப்பது மட்டுமன்றி அதை வளர்ப்பதிலும் ஒரு அரசியல்வாதி முன்னின்று உழைக்கின்றான். இவ்வாறு மக்களின் முட்டாள்தனத்தை சரியாகப் பயன்படுத்தத் தெரிந்த ஒருவனால்தான் வெற்றிகரமான அரசியல்வாதியாக வலம்வர முடிகின்றது.

அரசியல்வாதிகளுக்கு மேடைகளைக் கண்டால் அதிக சந்தோசம். ஏனெனில் மக்கள் தன்னை ஒரு சிறந்த பேச்சாளன் என்று சொல்ல வேண்டும் என்பது அரசியல்வாதிகளின் எதிர்பார்ப்பு. அதேநேரம், மக்களுக்குச் சிறந்த கருத்துக்களைக் கூறிய தலைவர்களும் இல்லாமலில்லை.

துண்டுப் பிரசுரங்களை வெளியிடுதல், தனது படம் பதித்த போஸ்டர்களை ஒட்டுதல், விஞ்ஞாபனங்களை வெளியிடுதல், வானொலி, தொலைக்காட்சி போன்றவற்றினூடாக தமது பிரச்சாரங்களை மேற்கொள்ள





முடியும். இதன் போதெல்லாம் மக்களை உணர்ச்சிவசப்படுத்தத் தெரிந்திருக்க வேண்டும். மக்கள் சமயக் கருத்துக்களின்பால் அதிக ஈடுபாடுடையவர்கள். எந்த நிலையிலும் சமயக் கருத்துக்களின் பிடியிலிருந்தும் பிரித்துப் பார்க்க முடியாதவர்களாக இருக்கின்றனர். எனவே, அவர்களது சமய உணர்வுகளைத் தூண்டக்கூடிய கருத்துக்களை கூறத் தெரிந்திருக்க வேண்டும்.

அரசியல்வாதிகளிடம் மக்கள் கூட்டம் நிரம்பி வழிய வேண்டும் என்ற பேராசை இருக்கும். மக்களெல்லாம் தன் பக்கம்தான் என்று எதிர்த்தரப்பினருக்குக் காட்டுவதற்கு அரசியல்வாதி அதிகம் விருப்பம் கொள்வான். எனவே நீ வருடத்திற்கொருமுறை உன் ஆதரவாளர்களைச் சந்தித்தாலும் அவர்கள் வயிறு நிறையும்படி ஏதாவது செய்துவிட்டால் நீ மக்களுக்குச் சேவை செய்வதாக அவர்கள் திருப்திப்பட்டுக் கொள்வார்கள். பொதுவிடயங்கள் எத்தனை நன்மை பயப்பனவாக இருந்தாலும் அதைவிடவும் தனது சுயநலனுக்கே மக்கள் அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றபடியால், இந்த யோசனையை நான் முன்வைக்கின்றேன்.

உன்னிடம் பணமும் அதிகாரமும் இருக்கும்வரை உன்னைச் சுற்றி ஒரு கூட்டம் இருககும். அக்கூட்டம் நீ எதைக் கூறினாலும் ஆஹா ... ஓஹோ என்று உன்னைப் புகழும். இவர்கள் மத்தியில் இனரீதியான உணர்வு மேலோங்கி இருக்கும். எனவே, குறிப்பிட்ட இனம்

தொடர்பான கருத்தரங்கு என்ற பெயரில் கூட்டம் கூட்டி எதையாவது பேசு. ஒவ்வொருமுறையும் எதையாவது மக்களுக்கு வழங்கு அல்லது வழங்குவது தொடர்பான கூட்டம் என்று கூட்டு. இக்கூட்டத்துக்கு வருகின்ற மக்களின் முன் உன் பிரச்சாரங்களை முன்னெடுக்க முடியும்.

தற்போது பணக்காரர்களைப் போலவே கலைஞர்களும் அரசியலில் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கிவிட்டனர். அரசியல் என்கின்ற நாடக மேடைக்கு கலைஞர்களின் பிரபல்யமும் தேவைப்படுகின்றன. இதனால்தான் நடிக, நடிகைகள் அரசியல் கட்சி உறுப்பினர்களுக்கு ஆதரவுப் பிரச்சாரம் செய்துவருகின்றனர். ஒருவருக்காக நாம் ஏன் பிரச்சாரம் மேற்கொள்ள வேண்டும்? நாமே நமக்காகப் பிரச்சாரம் செய்தால் என்ன? என்று சிந்தித்த பலர் இன்று அரசியல்வாதிகளாகி விட்டனர். அரசியல் என்பது சாக்கடை என்று ஏன் அழைக்கப்படுகின்றது? அரசியல்வாதிகளுக்கு அடியாட்களாக இருந்தவர்கள்கூட தாமும் அரசியல்வாதிகளாகினால் என்ன என்று சிந்திக்கத் தலைப்பட்டு விட்டனர்.

சமூகத்துக்காக அன்றாடம் பல்வேறு நிலைமைகளில் உழைத்த சமூக நலனுக்காகப் பாடுபட்ட ஒருவனுக்குக் கிடைக்கும் பதவியுயர்வாகவே அரசியல் பிரவேசம் அமைய வேண்டும். அதைவிடுத்து கண்டவனெல்லாம் சென்று வருகின்ற ஒரு இடமாக அரசியற்களம்





ஆகிவிட்டதனால் அதனை ஒரு சாக்கடை என்கின்றனர்.

பலநாட்கள் கஷ்டப்பட்டு உழைத்த உழைப்பின் வெற்றியின் மூலம் பிரபல்யம் பெற்று விளங்கும் எத்தனையோ சாதனையாளர்களை நாம் கண்டிருக்கிறோம்; சரித்திரங்கள் மூலம் கற்றிருக்கிறோம். அதேவேளை, ஒரு அற்ப விடயத்தைச் செய்துவிட்டுக்கூட சிலர் பிரபல்யமாகி விடுகின்றனர்.

ஒரு நடிகை பொது வைபவமொன்றில் கலந்துகொண்டு தனது உள்ளாடையைக் கழட்டி பார்வையாளர்களுக்கு வீசியெறிந்தாள் என்பது ஒரு காலத்தில் உலக முழுவதும் பிரபல்யமானதொரு விடயம். இதன் மூலம் இவள் அடைந்த புகழுக்கு அளவேயில்லை.

ஹிட்லர் அதிகம் உயிர்களைக் கொன்றான் என்பதன் மூலம் புகழ்பெற்றான். அமெரிக்கா ஒரே நேரத்தில் இலட்சக்கணக்கானோரைக் கொல்லக்கூடிய அணுகுண்டை ஜப்பானில் வெற்றிகரமாய் பரீசித்ததன் மூலம் உலகப் புகழ்பெற்றது. அஹிம்சைப் போராட்டத்தின் மூலம் இந்தியாவுக்கு சுதந்திரம் பெற்றுக்கொடுத்ததன் மூலம் காந்தி உலகப் பிரபல்யம் பெற்றார். அவரைக் கொன்றதன் மூலம் கோட்சே புகழ்பெற்றான்.

இன்று அரசியலுக்கு பிரபல்யம் என்பது மிகவும் அவசியமாகிவிட்டது. மேடைப் பேச்சுக்களின்போது

கொள்கை விளக்கங்களைக் கூறாவிட்டாலும் பரவாயில்லை; எதிர்க்கட்சிக்காரனின் பலவீனத்தைப் பற்றிக் கூற முடியுமென்றால் ஒரே நாளில் உனது பேரும் புகழும் பரவிவிடும்.

பாராளுமன்றத்தில் மக்களின் பிரச்சினைகளை கூறத் தெரியாவிட்டாலும் பரவாயில்லை; செங்கோலைக் களவாடத்தெரிந்தால் அதுவே போதும் உலகப் புகழ்பெற்றுவிடலாம். பாராளுமன்ற உறுப்பினரொருவர் பாராளுமன்றத்துக்குள் வைத்து சக பாராளுமன்ற உறுப்பினரால் கொலை செய்யப்பட்ட சம்பவம் இன்றுவரை நடைபெறவில்லை. அதுவரை பாராளுமன்றங்களின் கௌரவம் காப்பற்றப்பட்டு வருகின்றது. அந்தளவுக்காவது பாராளுமன்றத்தின் கௌரவத்தைப் பாதுகாத்து வைத்திருக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

இருந்தாலும், உறுப்பினர்களுக்குள்ளேயே நன்றாகச் சண்டை பிடிக்கத் தெரிந்திருந்தாலும் ஒரே நாளில் புகழ்பெற முடியும். இதனால்தான் களவாடுதல், சண்டை பிடித்தல் போன்றவற்றைத் தொழிலாகக் கொண்டவர்கள் பாராளுமன்றம் சென்று தமது இயல்புநிலையை வெளிக்காட்டி வரலாற்றில் தமது புகழை பதித்து விடுகின்றதை காணமுடிகின்றது. நிச்சயமாக இவ்விடயம் பிறப்பால் அமைய வேண்டும். அமையாத ஒருவரால் திடீரென குழப்பக்காரராக ஆக முடியாதென்பதை சகலரும்





அறிவர்.

சிலநேரங்களில், சபையில் பேசக் கிடைக்கின்ற ஐந்து நிமிடங்களில் நான்கு நிமிடங்களை எதையாவது கூறி மழுப்பி விட்டு, இறுதி ஒரு நிமிடம் மட்டும் மக்களின் பிரச்சினைகள் பற்றிப் பேசுகின்ற அரசியல்வாதிகளும் உள்ளனர். நேரம் முடிந்துவிட்டது என அறிவிக்கப்படுகின்றபோது எனது மக்களின் பிரச்சினைகளப் பேச எனக்கு உரிமையில்லையா? எனக்கேட்டு கூக்குரலிட்டு பாராளுமன்றத்தை சந்தைக் கடையாக்கி சண்டையிடும் அரசியல்வாதிகளும் இல்லாமலில்லை.

தலைவர் தன்னோடு சிரித்துப் பேசுகின்றார் என்பதிலேயே திருப்தி காணும் சமுதாயமொன்று வளர்ச்சியடைந்து வருகின்ற நிலையில், மக்கள் பிரச்சினையை அறிந்தவன்தான் தலைவனாக இருக்க முடியும் என்ற எண்ணக் கரு மழுங்கடிக்கப்பட்டு வருகின்றது. பாராளுமன்றம் என்பது மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகாணப்படுகின்ற ஒரு உயர்மட்ட சபையாக இருக்கின்ற போதிலும், இன்று அதன் நடைமுறைகளை பொதுமக்கள் பார்வையிலிருந்து மறைத்து வைப்பதே சிறந்தது என்னும் அளவுக்கு அங்கு நடைபெறும் சம்பவங்கள் காணப்படுகின்றன. நவீன ரகமான திருட்டுகள் அங்கு நிகழுகின்றன.

மதகுருவிற்கு கண்ணியம் வழங்கும் மூன்றாம்

உலக நாடுகளில் பாராளுமன்றத்தினுள் மத குருக்கள் அவமதிக்கப்பட்டு வருகின்ற சந்தர்ப்பங்கள் தற்போது சாதாரண விடயங்களாகி விட்டன. எனவே பாராளுமன்றம் செல்வதற்கும் அரசியல்வாதியாவதற்கும் தமது இயல்பு வாழ்க்கையில் மாற்றத்தினைக் கொண்டு வரவேண்டும் என்ற அவசியமேயில்லை என்பது கடந்த காலங்களில் நிருபிக்கப்பட்டுள்ளன.

பொருளாதாரமும், பாலியலும் மனிதனை ஆட்டிவைக்கின்ற இரு பெரும் சக்திகள் என்பதில் ஐயமில்லை. எதிர்காலத்தில் இதன் செல்வாக்கு மக்கள் மத்தியில் அதிகம் ஆதிக்கம் செலுத்தும். உலகையே ஆட்சி செய்யும். இன்று எத்தனையோ சமுகசேவகர்கள் தமது வாழ்நாள் முழுவதையும் சமூகத்துக்காக அர்ப்பணித்து விட்டு மறைந்து விடுகின்றனர். எப்போதோ, எங்கேயோ ஒரு மூலையில் அவர் நினைவுகூரப்படுவார். ஆனால், அரசியல்வாதிகள் அப்படிப்பட்டவர்களல்ல. அவர்கள் ஒரு விடயத்தைச் செய்தாலும் பிரபல்யம்; செய்யாவிட்டாலும் பிரபல்யம். மக்கள் மகிழ்ச்சியாக வாழ்ந்தாலும் பிரபல்யம். நிம்மதியற்று வாழ்விழந்து அழிந்தாலும் அதிலும் பிரபல்யம். அதனால்தான் அரசியல்வாதிகள் மீது மற்றவர்களின் கவனம் அதிகரித்துக் காணப்படுகின்றது.

இதன் பிரதிபலிப்பாகவே அவர்களின் பாலியல் பலவீனங்களும் வெளிச்சம் போட்டுக் காட்டப்படுகின்றது.





இது சரியா? தவறா? என்பது ஒரு புறமிருக்க, பிரபல்யம் அடைவதற்கு இதுவும் ஒரு வழிதான். தனது பிரபல்யத்துக்காக பத்திரிகைகளின் முன்பக்கத்தில் இப்படியான செய்திகளை பிரசுரிக்கச் செய்து பிரபல்யம் பெற்ற அரசியல்வாதிகளும் வாழ்ந்த உலகம் இது. எனவே பலவீனங்கள் என்பது அரசியல்வாதிகளின் பலம் என்பதே எனது கருத்து.

முகவரியே இல்லாத சிலர் இந்தப் பாராளுமன்ற உறுப்புரிமையைப் பெறுவதன் மூலம் தமது புகழை வளர்த்துக் கொள்ள முனைகின்ற ஒரு நிலைதான் சமகால அரசியலில் காணப்படுகின்றது. பாராளுமன்றத்தின் கண்ணியத்தை மதித்து, மக்களின் நீதிமன்றங்களாக பாராளுமன்றங்கள் தொழிற்படுகின்ற போதிலும் வாக்காளர்கள் தமக்குரிய தகுதியான தலைவர்களைத் தேர்வு செய்வதில் காட்டுகின்ற அக்கறையானது ஏனோதானோ என்ற நிலையைத் தோற்றுவித்துள்ளது. எமது பிரதிநிதிகள் என்ற பதத்தின் மூலம் எமது பிரதிநிதி செய்கின்ற முட்டாள்தனமான நடவடிக்கைகளுக்கு பொதுமக்களாகிய நாமும் துணைபோகக் கூடிய நிலைமையை இத்தலைவர்கள் விரும்பியோ விரும்பாமலோ எம்மீது ஏற்படுத்திவிடுகின்றனர். இறுதியில், ஒரு முட்டாளின் படையிலுள்ள சிப்பாய்களாக வாக்காளர்கள் காணப்படுகின்ற நிலை ஏற்படுகின்றது.

ஒரு இராணுவ சிப்பாய் இரவில் தூங்காமல்

இருக்கின்றான் என்றால் மக்கள் நிம்மதியாகத் தூங்குகின்றனர் என்று பொருள். மக்களுக்கென்றொரு ஆபத்து வந்துவிட்டால் அதற்கு முதலில் முகங்கொடுப்பவன் இந்த இராணுவ சிப்பாயே. இப்படியான ஒருவராகத்தான் மக்கள் பிரதிநிதி காணப்பட வேண்டும். இவர்கள் மக்களின் பிரச்சினைகளுக்குரிய தீர்வினை பெற்றுத்தருவார்கள் என்ற நம்பிக்கையிலேயே மக்கள் அரசியலில் ஈடுபாடின்றி காணப்படுகின்றனர். ஆனால், மக்கள் தம் மீது வைத்திருக்கின்ற நம்பிக்கைக்கு முரணாக மக்களின் உயிர்களைப் பணயம் வைக்கும் அரசியல் முறை இன்று நடைபெற்று வருவது அதிர்ச்சியாகவுள்ளது. அதிக உயிர்கள் இழக்கப்படுவது ஒருவர் அரசியலுக்கு நுழைவதற்கு இருக்கின்ற உயர்ந்த தகுதியாக இன்று மாறி வருகின்றது.

யானைப்பசிக்கு அவல் பொரி கொடுத்தாற்போல் என ஒரு கதை இருக்கின்றது. மக்களைத் தவிக்கவிட்டு வேடிக்கை பார்த்தல் என்பது அரசியல்வாதிகளின் வேலையாகி விட்டது. மக்களுக்கு ஏற்படுகின்ற இழப்புக்களின்போதும், அநீதிகளின்போதும் தான் மட்டும் நிம்மதியாக வாழ்ந்து விட்டால் போதும் என நினைக்கும் அரசியல்வாதிகள் தனது தேவை என்று வந்துவிட்டால் மட்டும் மக்களின் காலடிக்ளுக்கு ஓடிவந்து கூறும் பொய்யான வாக்குறுதிகளை மக்களும் நம்பிவிடுகின்றனர். காலாகாலமாக இதையே இவர்கள் செய்து வருகின்றனர் என்றாலும், இன்னும் மக்கள் விழித்துக் கொண்டதாகத்





தெரியவில்லை. இதன் மூலம் முட்டாள்களின் இராஜ்ஜியத்தில் ராஜாக்களாக உலா வருகின்றனர் இந்த அரசியல்வாதிகள். இப்படியானதொரு பிழைப்பு உனக்குத் தேவையா? இருந்தாலும் சுயநலம் என்று வந்துவிட்டால் இவையெல்லாம் சாதாரண விடயங்களாகி விடும்.

அரசாங்கம் ஆட்சி அமைத்தவுடன் தமது பணிகளை இலகுபடுத்தவென ஒவ்வொரு துறையையும் ஒவ்வொரு வாரியத்திடம் ஒப்படைத்துவிடும். இவ் வாரியங்களை அமைச்சு என்றும் அதற்குப் பொறுப்பானவரை அமைச்சர் எனவும் அழைப்பர். குறிப்பிட்ட துறை தொடர்பான விடயங்களுக்கும், அபிவிருத்திக்கும் பொறுப்பாக இவர் கடமையாற்றுவார். இவ்வாறான அமைச்சர்கள் கூடுகின்ற சபையானது அரசாங்கத்துக்கு வழிகாட்டுவதற்காகவும் ஆலோசனை வழங்குகின்ற சபையாகவும் இருக்கும்.

அமைச்சர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு நாட்டிலும் வரையறைக்குட்பட்டதாக இருக்கும். இவர்களின் அதிகரிப்பானது மேலதிக செலவுக்கு நாட்டை இட்டுச் செல்லும் என்ற வாதம் ஒருபுறமிருந்தாலும், நிருவாகத்தை இலகுபடுத்தல் எனும்போது இதன் அதிகரிப்பானது ஒரு பாரிய பிரச்சினையே அல்ல. இருந்தாலும், ஒவ்வொரு அமைச்சருக்கும் என பிரத்தியேக சொகுசு வசதிகள் ஏற்படுத்தப்படுகின்ற முறைமை ஒழிக்கப்படுகின்றபோது கூடுதல் அமைச்சர்கள் நியமிக்கப்படுகின்றார்கள் என்ற வாதம் அரசுக்கு ஒரு சாதகமான தன்மையையே

ஏற்படுத்தும்.

இதை ஏன் இங்கு கூற வேண்டியேற்படுகின்றது என்றால், தனக்கு சாதமான அல்லது தான் சார்ந்திருக்கின்ற கட்சியைச் சேர்ந்தவர்கள் அமைச்சர்களாக வரவில்லை அல்லது தனது விருப்பத்துக்குரிய கட்சி ஆட்சி அமைக்கவில்லை. எனவே மாற்றுக்கட்சிகளைச் சேர்ந்தவர்களிடமிருந்து உதவிக்ளைப் பெறுவதென்பதும், மாற்றுக் கட்சிகளில் எமது பிரதிநிதிகள் உறுப்பினர்களாக இருப்பதும் ஒரு சமூகத்துக்குச் செய்யும் துரோகம் என நினைக்கும் புத்திசாலி சமூகத்துக்கும் (?) அவர்களை வழிநடாத்துகின்றோம் என்ற போர்வையில் அபிவிருத்திக்கும் மக்களுக்குமிடையே இடைவெளியை ஏற்படுத்தி அந்த சமூகத்தின் அடிப்படை உரிமையை இல்லாமல் செய்கின்ற அரசியல் தலைவர்களுக்கும் இடையே நாம் வாழ்கின்றோம்.

ஒரு முட்டாள் மேடையில் ஏறி உலகிலேயே நீங்கள்தான் புத்திசாலி என வாக்காளர்களை விழிக்கின்றபோது அந்த வாக்காளர் பட்டியலிலே இருக்கின்ற படித்தவர்கள், புத்திஜீவிகள் என்கின்ற ஒருசாரார் இந்த முட்டாளுக்காக ஆதரவுக் கொடி பிடிக்கின்றனர். அந்த ஒரு வார்த்தையிலேயே தாங்கள் யார்? தமது தகுதிகள் என்ன? கூறுபவன் யார்? அவனின் தகுதிதான் என்ன? என்பதை வாக்காளர்கள் சிந்திக்கத் தவறிவிடுகின்றனர். இதனால்தான் உலகில் முட்டாள்களின்





இராஜ்ஜியங்களில் கொடி பறந்து கொண்டிருக்கின்றது.

ஒரு நாட்டை குறிப்பிட்ட காலத்துக்கு நிருவகிக்கவென ஒரு அரசு தெரிவுசெய்யப்பட்டால் அதற்குக் கட்டுப்படவேண்டியது அந்நாட்டு மக்களின் கடமையாகும். தமக்குத் தேவையானதை ஆட்சியில் இருக்கின்ற ஆட்சியாளர்களிடம் பேசி பெற்றுக் கொள்வது தான் முறையாகும். ஒரு குறிப்பிட்ட மக்கள் பிரதிநிதிக்கு ஆட்சியில் இருக்கும் கட்சியோடு உடன்பாடு இல்லை என்பதற்காக ஒட்டுமொத்த சமூகமே அபிவிருத்தியில் பின்தங்கியிருப்பதும் தன்னுடைய அரச விரோதப்போக்கு சாதகமான வார்த்தைகளைக் கூறி அரசியல்வாதிகள் பிழைப்பு நடத்துவதும் இப்படியான செயல்கள் மூலம் தாம் ஏமாற்றப்படுகின்றோம் என்பதை உணரக்கூட பக்குவமில்லாத வாக்காளர் என்கின்ற ஒரு சமுகத்தவர்கள் மத்தியில் நாம் வாழ்கின்றோம் என்பதும் எமக்கு மிகவும் வேதனையளிக்கின்ற விடயமல்லவா?

ஒரு பொது விவாதத்துக்கு அழைக்கப்படுகின்றபோது அங்கு தொடர்ச்சியாக ஐந்து நிமிடங்களுக்கு மேல் தமது மக்களின் பிரச்சினை தொடர்பான கருத்துக்களை முன்வைக்கத் தெரியாதவர்கள் இன்று அரசியலில் மக்கள் பிரதிநிதிகளாகவுள்ளனர். இது அரசியல்வாதிகளின் தவறல்ல. மக்களின் தவறு. வாக்காளர்களின் தவறு. தெரிவுசெய்யும்போது விட்ட தவறை, அதற்கான பலனை, மக்கள் அனுபவிக்கின்றனர் என்பதே எனது பொதுவான

நிலைப்பாடாகும்.

இரண்டு அரசியல்வாதிகள் கலந்து கொள்கின்ற ஒரு விவாதம் முடிவடையும்போது இருவரும் என்ன என்ன வழிகளில் பொருட்களை சம்பாதித்துள்ளனர்? என்ன விதமான மோசடிகளைச் செய்துள்ளனர் என்பது அவர்கள் மூலமே வெளிக்கொணரப்படுகின்றது. இதை அவதானிக்கின்ற அனைவரும் தாமும் அரசியலில் ஈடுபாடு காட்டினால் அதிகம் உழைக்க முடியும். எந்தவித கஷ்டமுமின்றி உலகை வலம் வர முடியும். ஆடம்பரமாக வாழ முடியும் என்ற முடிவுக்கு வருகின்றனர். இதன் மூலம் அவர்களும் அரசியலுக்குள் வர ஆசைப்படுகின்றனர். சமுதாயத்திலுள்ள பிரச்சினைகளை தீர்ப்பதற்கும் மக்களுக்கு நிம்மதியான வாழ்வைப் பெற்றுக் கொள்வதற்குமென ஆணை பெற்று ஆட்சிக்கு வந்த எந்தவொரு அரசியல்வாதியும் மக்களை ஏமாற்றுவதில் வெற்றிகண்டிருக்கிறானேயன்றி தீர்வினைப் பெற்றுக்கொடுத்த வரலாறே இல்லை. இதனால்தான் இலட்சிய அரசியல்வாதிகள் இல்லை என்றேன். இலட்சாதிபதியான அரசியல்வாதிகள் உள்ளனர் என்றேன்.

ஒரு நாட்டுக்கோ பிரதேசத்துக்கோ எப்படியான ஆட்சி முறை சிறந்தது என்பதை அப்பிரதேசத்தில் வாழ்கின்ற மக்களே தீர்மானிக்க வேண்டும். அதுபோல் யார் ஆட்சியாளராக வரவேண்டும் என்பதையும் அம்மக்களே தீர்மானிக்க வேண்டும். இன்று பாகிஸ்தானில் இராணுவ





ஆட்சி நடைபெறுகின்றது. முன்பும் நடைபெற்றிருக்கிறது. மக்கள் இராணுவ ஆட்சிக்கு தம்மைப் பழக்கப்படுத்திக் கொண்டிருக்கின்றனர். எமக்கு இராணுவ ஆட்சிதான் தேவை என மக்கள் கூறினால் இராணுவ ஆட்சி அமையக் கூடாது என கூறுவதற்கு யாருக்கும் உரிமையில்லை.

ஈராக்கிலே ஜனாதிபதி சத்தாம் ஹுஸைனை ஆட்சியிலிருந்து அகற்றிவிட அமெரிக்கா முயற்சி செய்தது. இதற்கு அமெரிக்காவிற்கு எந்தவித உரிமையும் இல்லை. உலகில் சிறந்த ஆட்சி முறை ஜனநாயகம் தான் என்றால் அதன்பால் ஏன் ஈராக் மக்கள் கவரப்படவில்லை? இராணுவத்தைச் சேர்ந்த ஒருவர் அரசியல்வாதியாக மாறுகின்றபோது ஒட்டுமொத்த ஆட்சியும் இராணுவ ஆட்சி என்று முத்திரை குத்தப்படுகின்றது. அப்படியெனில் ஜனநாயகம் என்ற ஒன்று ஏன் பாக்கிஸ்தான் மக்களைக் கவரவில்லை? ஒரு இராணுவ வீரனால் ஜனநாயகத்தை ஏற்படுத்த முடியாதா? அல்லது பாதுகாக்க முடியாதா? கடந்த காலங்களில் அரசர்களுக்காக மக்கள் என்ற நிலை வேரூன்றியிருந்தது. மக்கள் மன்னர்களின் அடிமைகள் என்ற போக்கை மாற்றி மக்களுக்காக அரசர்கள்; மக்களே உயர்ந்த அதிகாரம் கொண்டவர்கள். ஒருவரை ஆட்சியாளர்க தெரிவுசெய்யும் உரிமை மக்களின் கைகளுக்குச் சென்றதன் மூலம் மக்களை உயர்ந்த சக்தியாக காட்டமுனைவது ஜனநாயகத்தின் பண்பாக இருந்தது.

ஒரு ஆட்சியாளன் யாராக இருந்தாலும் அந்நாட்டு மக்களின் பெரும்பான்மை ஆதரவைப் பெற்றிருந்தால் போதுமானது. அதைவிடுத்து மேற்குலக நாடுகளால் விரும்பப்படுகின்ற ஒருவர்தான் கீழைத்தேய நாடுகளில் தலைவர்களாக இருக்க வேண்டும் என நினைப்பதன் மூலம் ஜனநாயகம் என்ற பதம் மீள் பரிசீலனை செய்ய வேண்டிய கட்டத்தில் உள்ளது. அமெரிக்காவின் ஆட்சிமுறைதான் ஜனநாயகம் என்றால் அதை ஏனைய நாடுகள் ஏன் பின்பற்ற வேண்டும்? உலகில் ஒப்பீட்டளவில் நோக்குகின்றபோது ஈராக்கும் அமெரிக்காவும் ஒன்றல்ல. புவியியல் ரீதியிலும் இன, மத, மொழி, கலாசார அடிப்படையில் எந்தவிதத்திலும் இவ்விரு நாடுகளும் ஒன்றுபடவில்லை. அப்படியென்றால் எப்படி அமெரிக்க மக்களின் ஆட்சிமுறை மட்டும் ஈராக் மக்களால் விரும்பப்படும். எனவே, இன்று ஜனநாயகத்தைக் கொண்டுவருகின்றோம் என்ற பெயரில் அமெரிக்க மக்களைத் திருப்திப்படுத்தும் நோக்கில் அமெரிக்க ஆட்சியாளர்கள் ஒரு நாட்டையே அழித்து பல்லாயிரம் உயிர்களைப் பலியெடுத்திருப்பதென்பது ஆட்சியைத் தக்கவைத்துக் கொள்ள கொலையும் செய்யலாம் என்பதை உலகிற்கு உணர்த்திக் கொண்டிருக்கிறது.

தனது நாட்டு மக்கள் விரும்பும் ஆட்சி முறையை ஏனைய நாட்டு மக்களும் விரும்ப வேண்டும் என்ற கொள்கையை கடைப்பிடிப்பதும், அதைப் பலவந்தமாக திணிக்க முனைவதும், அதில் தோல்வி கண்ட நாடுகள்





ஆயுதங்களை ஏந்தி மக்களை அடிமைப்படுத்தி, பலவந்தமாக ஒரு கொள்கையை ஏற்கச் செய்வதும் சர்வாதிகாரமேயன்றி வேறில்லை. இதுபோன்ற சர்வாதிகாரிகளால் முன்வைக்கப்படுகின்ற ஒரு விடயம்தான் ஜனநாயகம் என்றால் அதுபற்றி ஏனைய மக்கள் அதிகம் பேசத்தேவையில்லை.

இந்த யுத்தங்களுக்கும், மேலாண்மைக்கும் அடிபணியாத மக்கள்மீது பொருளாதார தடை என்றவொன்றை பொருளாதாரத்தில் முன்னேறிய நாடுகள் விதிக்கின்றன. இதன் மூலம் அம்மக்களை பொருளாதாரத்திலும் ஏனைய அத்தியாவசியப் பொருள்களைத் தடைசெய்வதன் மூலமும் சித்திரவதை செய்கின்றனர். இப்படியான நடவடிக்கைதான், சித்திரவதைதான், அபிவிருத்தியைத் தடைசெய்வதன் மூலம் நமது உள்ளூர் தலைவர்கள் இன்று செய்துவருவது. இதன் முன்னேறிய கட்டம்தான் நாடுகளுக்கிடையிலான பொருளாதாரத்தடை. இங்கு பொருளாதாரமே பிரதான பங்கு வகிக்கின்றது. எனவே, இங்கிருப்பது ஜனநாயகமா? மார்க்ஸிஸமா? என சற்று யோசிக்க வேண்டியுள்ளது. இங்கு உலகம் மார்க்ஸிஸத்தின் மூலமே நிர்வகிக்கப்படுகின்றது. அதன் புதிய பெயர்தான் ஜனநாயகமேயன்றி வேறில்லை.

இன்று ஒருநாட்டிலுள்ள கோடிக்கணக்கான மக்கள் தெரிவுசெய்த ஒரு தலைவன் வேறொரு நாட்டினால்

அடிமைப்படுத்தப்படுகின்றான் எனும்போது ஜனநாயகம் கேள்விக்குறியாகின்றது. உயர்ந்த வர்க்கத்தினர், பொருளாதாரத்தில் முன்னேறிய வர்க்கத்தினர் பொருளாதாரத்தடை என்ற ஒன்றை விதிக்கின்றனர் எனும்போது அங்கு மார்க்ஸிஸம் தோற்றம் பெறுகின்றது. அதை மார்க் சொன்னார் என்ற காரணத்தினால் மேற்குலகம் வெளிப்படையாக ஏற்றுக்கொள்ள தயங்குகின்றது என நான் துணிந்து கூறுவேன். அதனால்தான் ஜனநாயகம் என்றதொரு புதிய பதத்தை உபயோகித்து மக்களை அடிமைப்படுத்த மேற்குலக நாடுகள் முனைகின்றன. இன்று ஜனநாயகம் என்பது சோசலிசத்துக்கு முன்னால் தோல்வி கண்டு வருகின்றது. அது சர்வாதிகாரிகளின் செல்லப்பிள்ளை.

உற்பத்தி உறவுகளே வர்க்க வேறுபாடுகளை நிர்ணயிக்கின்றன. என மார்க்ஸ் கூறுகின்றார். இன்று ஆள நினைக்கின்ற சமுகத்துக்கும் அந்த நாடுகள் அடிமைப்படுத்த நினைக்கின்ற சமுகத்துக்கும் இடையிலுள்ள பிரதான வேறுபாடு புதிய கண்டுபிடிப்புகளும் உற்பத்தியின் மீதான உறவுகளுமேயாகும். மேலும் சொத்துடமை, அதன் கட்டுப்பாடு என்பவற்றுடன் இணைந்ததே வர்க்க முறைமை எனவும் மார்க்ஸ் கூறுகின்றார். சொத்துக்களின் அதிகரிப்பிலும், பொருளாதாரத்திலும் மேலோங்கியிருக்கின்ற அரசுகளும் தம்மைவிடக் குறைந்த அரசுகளை கட்டுப்படுத்தி வைப்பதன் மூலம் உலகுக்கு





தாமே உயர்ந்தவர்கள் எனக் காட்டுகின்ற ஒரு நிலைமையைக் காணலாம். இதுதான் இன்று சாதாரண குடும்பங்களிலும் காணப்படுகின்றன. அங்கு ஆரம்பித்து அரசியலுக்குள் ஊடுருவுகின்றது. அதன் வளர்ச்சிப்போக்கு நாடுகளுக்கிடையிலான யுத்தங்களாக மாறிவருகின்றன.

உலக மயமாக்கல் என்ற வகையில் உலகம் எவ்வளவோ முன்னேற்றகரமான நிலையை அடைந்து செல்கின்றது. விஞ்ஞான கண்டுபிடிப்புகள் காலத்துக்குக்காலம் முன்னேற்றம் கண்டுவருகின்றன. இதனால் உலகம் ஒரு கிராமமாகச் சுருங்கிவிட்டநிலையை இன்டர்நெற்றின் வருகை நன்கு உணர்த்தி நிற்கின்றன. இந்த கிராமமான உலகில் நன்கு முன்னேறிய உயர்குல நாடுகள் முன்னேறத் துடிக்கும் நடுத்தர வர்க்க நாடுகளை தடுத்து நிறுத்துவதற்கு எடுக்கின்ற முயற்சியானது இன்று யுத்தங்களாக வெடித்துள்ளன. அந்நாடுகளை ஆக்கிரமிப்பதும் பொருளாதாரங்களை அழிப்பதும் மக்களை பொருளாதாரத்தடைகள் மூலம் துன்பங்களுக்குள்ளாக்குவதன் ஊடாக தமக்கு ஆதரவான சக்திகளாக மாற்ற நினைப்பதும், மக்களை தமது அரசியல் சக்திகளுக்கெதிராக தூண்டிவிட்டு விளையாடுவதும் என்பது இன்றைய நவீன உலகின் பொழுதுபோக்காகி விட்டது.

மனித வாழ்வின் மேம்பாட்டுக்காக நாளாந்தம் நடைபெறும் விஞ்ஞான தொழில்நுட்ப கண்டுபிடிப்புக்களும்,

பொருளாதாரமும் இன்று மனிதனை ஆட்டிப்படைக்கும் கருவிகளாக மாற்றிவிட்டன. இவை உலகையே ஆளும் சக்திகளாக வளர்ச்சிகண்டுவருவதன் மூலம் உலகில் மனிதனின் இருப்பை கேள்விக்குள்ளாக்கியுள்ளது.

அரசியல் ஒரு விஞ்ஞானமா? கலையா? என்ற ஆய்வு நீண்டகாலமாக அரசியல் அறிஞர்களால் முன்வைக்கப்பட்டு வருகின்றன. ஒரு ஆய்வு எவ்வளவு தூரம் விஞ்ஞான ரீதியிலான முடிவுகளை முன்வைக்கின்றது என்பது இங்கு ஆய்ந்து நோக்கக் கூடியது.

பொதுவாக அரசியல் விஞ்ஞான கற்கைகளோடே சேர்க்கப்பட்டு வருகின்றது. இருந்தாலும், விஞ்ஞானம் அடைகின்ற வளர்ச்சி, முன்னேற்றம் போன்று அரசியல் முன்னேற்றம் காணவில்லை. சமகால அரசியல் பின்னோக்கிச் சென்று ஆரம்ப காலத்தையும், ஆதிகாலத்தில் எந்தவிதமான ஆட்சிமுறை காணப்பட்டதோ அதாவது ஆண்டான் - அடிமை என்று சொல்லக் கூடிய ஒரு நிலையை நோக்கிச் செல்வதையும் உணரக்கூடியதாகவுள்ளது. இதனால், விஞ்ஞான ஆய்வுகளிலிருந்து தூக்கியெடுக்கப்பட வேண்டியதொரு விடயமாக அரசியல் காணப்படுகின்றது.

மேலைத்தேச நாடுகளைப் பொறுத்தவரை அவர்களின் பொருளாதார முன்னேற்றத்தையும், விஞ்ஞான





தொழில்நுட்ப முன்னேற்றங்களையும் ஏனைய நாடுகள் முன்மாதிரியாகக் கொள்ளலாமேயன்றி அவர்களின் ஆட்சிமுறை கீழைத்தேச, அபிவிருத்தியடைந்து நாடுகளுக்குப் பொருத்தமானவையல்ல. அதனால்தான் ஒரு இனக்குழுவைப் பிரதிநிதித்துவப்படுத்துபவர் அவ்வினக்குழுவின் உறுப்பினராக இருக்க வேண்டும். அம்மக்கள் வாழுகின்ற பிரதேசத்தைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும். இவ்விரண்டு தொடர்புகளும் இல்லாதவர்கள் அம்மக்களை ஆட்சிசெய்ய வருகின்றபொழுது மக்களுக்கும் ஆட்சியாளனுக்கும் இடையேயான இடைவெளி அதிகரிக்கும். இதனால் மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றக் கூடியதான ஆட்சிமுறையொன்றை ஏற்படுத்த முடியாது. இங்கு நல்லாட்சி நிலவாது. ஒரு சமுகத்தை தலைமை தாங்குகின்றவன் அந்த சமுகத்திலிருந்தே உருவாக வேண்டும். இரவல் தலைமைத்துவங்கள் மக்களின் நீண்டகால பாதுகாப்புக்கு ஒருக்காலும் வழிசமைக்காது. ஆட்சிமுறையும் அப்படியே.

பொருளாதார சமமின்மையினால் ஒரு சமுகம் இன்னுமொரு சமுகத்தை அடிமைப்படுத்த நினைக்கின்றது. அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெறத்துடிக்கின்ற சமுகம் இந்த உயர்குலத்தவர்களுக்கு எதிராக விரும்பியோ விரும்பாமலோ யுத்தமொன்றை தொடுக்கவேண்டிய நிர்ப்பந்தத்துக்குள்ளாகின்றது. இன்று வளைகுடா நாடுகளில் நடக்கின்ற யுத்தங்கள் வர்க்க

முரண்பாடுகளுடைய இரு அமைப்பினர்களுக்கிடையிலானதொரு யுத்தமே. இந்த யுத்தங்களின் மூலம் பலம் கூடிய நாடுகள் பலம் குன்றிய நாடுகளை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருகின்றன. அங்கிருக்கின்ற மக்களை தமது அடிமைகளாக்குவதன் மூலமும் அந்நாட்டுக்குரிய வளங்களைச் சுரண்டி தமது நாட்டுக்குக் கொண்டுசெல்வது மாத்திரமன்றி, வளங்களை சேதப்படுத்தி அழித்தும் விடுகின்றனர். குடிநீருக்குக்கூட அம்மக்கள் ஆக்கிரமிப்பாளர்களை சார்ந்து நிற்கக் கூடிய நிலையை உருவாக்கிவிட்டு, அந்நாட்டிலிருந்து சூறையாடப்பட்ட வளங்களையே மீண்டும் அம்மக்களுக்கு பிச்சை போடுவது போன்று வழங்குகின்றனர். இதன்மூலம் ஆண்டான் - அடிமை சமுக அமைப்பை தோற்றுவிக்கின்றனர். இதைத்தான் கார்ள் மார்க்ஸ் தெளிவாக தனது கோட்பாட்டில் கூறியிருந்தார்.

கூடுதலான நாடுகளை தமது கட்டுப்பாட்டில் கொண்டுவருவதன் மூலம் ஒரு நாடு வல்லரசு நாடாக தன்னைப் பிரகடனப்படுத்திக் கொள்கின்றது. இதன்மூலம் தான் கொண்டுவருகின்ற விடயம் எவ்வளவு சட்டத்தன்மை வாய்ந்தது என்ற வாதப்பிரதிவாதங்களுக்கே இடங்கொடாமல் தான் நினைத்ததை நிறைவேற்றிக் கொள்ள வல்லரசு நாடுகள் முற்படுகின்றன. இப்படியாக சிறிய நாடுகளை அடிமைப்படுத்துகின்ற நாடுகளில் பெரும்பாலானவை முதலாளித்துவ நாடுகளாகவே இருக்கின்றன. இங்கு முன்னிலை வகிப்பது





பொருளாதாரமேயன்றி வேறில்லை. முதலாளித்துவ நாடுகள் தமது நாட்டின் ஆட்சியை பொருளாதாரத்தின் மீதே கட்டியெழுப்புகின்றனர்.

வரலாற்றில் முதலாளித்துவ அரசு என அழைக்கப்படுகின்ற இவ்வரசு முதலாளிகளின் அரசாக இருந்து ஏனைய கீழ்ப்பட்ட வர்க்கங்களை அடக்கியாளப் பயன்படுத்தும் ஒரு கருவியாக மட்டுமே காணப்படுகின்றது. இதனால்தான் இவர்களின் ஆட்சிமுறையும் ஏனைய நாடுகளால் விரும்பப்படவில்லை. இந்த வளர்ச்சியடைந்த நாடுகளின் பொருளாதாரங்களையும், விஞ்ஞான உற்பத்திச் சாதனங்களையும் கொள்வனவு செய்வதில் கீழைத்தேச நாடுகள் காட்டுகின்ற ஆர்வம் அவர்களின் ஆட்சிமுறைகளை பின்பற்றுவதில் காட்டுவதில்லை. ஏனெனில் அவர்களின் ஆட்சிமுறைகள் கொள்கைகள்மேல் கட்டியெழுப்பப்படவில்லை. மாறாக, அவை பொருளாதாரத்திலும் தொழில்நுட்பத்திலுமே கட்டியெழுப்பப்படுகின்றன.

உயர்ந்த பொருளாதார முன்னேற்றத்தைக் கொண்ட நாடுகளே பல கோடி செலவில் ஆயுதங்களையும் உற்பத்தி செய்கின்றன. அதன் துணைகொண்டு ஏனைய நாடுகளை அடிமைப்படுத்தி நினைக்கின்றன. இதற்குப் பிரதான காரணியாக பொருளாதாரமே திகழ்கின்றது. அமெரிக்கா, ஈராக்மீது போர் தொடுத்தபோது அமெரிக்காவில் நடைபெற்ற செப்டம்பர்-11 தாக்குதல்

அமெரிக்காவின் பொருளாதாரத்தை மையப்படுத்திய தாகவே அமைந்தது. பொருளாதார பலத்தை அடிப்படையாக வைத்தே அமெரிக்கா இந்த தாக்குதலை மேற்கொண்டிருந்தால் இந்த பொருளாதாரத்தை அழிப்பதைத் தவிர வேறு வழியில்லை என்பதை இன்று உணரக் கூடிய காலம் நெருங்கிவிட்டது.

முதலாளித்தவ சமுகத்தின் சுரண்டல்களையும் மேலாதிக்கத்தையும் எதிர்க்கும் போக்கு இன்று வலுவடைந்து வருகின்றது. ஆயுத உற்பத்தியில் பல்வேறு நாடுகளும் போட்டிபோடுவதன் மூலம் நாடுகளுக்கிடையே ஒரு சமநிலையைப் பேண முனைகின்றன. அதேவேளை, பொருளாதாரத்திலும் சமபலத்தைக் காட்டவேண்டிய தேவை உலக நாடுகளுக்கு ஏற்பட்டுள்ளது. ஒன்றில் பொருள் உற்பத்தி மூலம் பொருளாதாரத்தைப் பெருக்க நினைக்கின்றனர். அல்லது ஏனைய நாடுகளின் பொருளாதாரங்களை அழிப்பதன் மூலம் பொருளாதாரத்தை சமப்படுத்த நினைக்கின்றனர்.

ஒரு ஆட்சியைக் கொண்டுவருவதற்கு பொருளாதாரம் மட்டுமே போதுமானது என்பது இதன் மூலம் பொய்ப்பிக்கப்பட்டிருக்கின்றது. பொருளாதார சமத்துவத்தை உலகில் ஏற்படுத்துவதன் மூலம் சகல நாடுகளும் சம பலத்துடன் நிம்மதியாக வாழமுடியும் என்ற சிந்தனைப் போக்கு வளர்ச்சியடைந்து வருகின்றது. இன்று பல்வேறு நாடுகள் ஒன்றிணைந்து ஒரு பொதுவான





நாணயத்தை தமக்குள் புளக்கத்துக்கு விட்டுள்ளன. ஐரோப்பிய யூனியன் நாடுகள் யூரோ நாணயத்தை புளக்கத்துக்கு விட்டுள்ளன. இதன்மூலம் அந்நாடுகளில் பொருளாதார ரீதியிலான சமத்துவத்தைப் பேண அந்நாடுகள் முறபட்டுக் கொண்டிருக்கின்றன. அதேபோல் சார்க் அமைப்பு நாடுகளும், ஏனைய நாடுகளும் எதிர்காலத்தில் இப்படியானதொரு நிலையைக் கொண்டுவந்தால் இன்று பலமுனைப் போட்டியாக இருக்கின்ற பொருளாதார சமமின்மை எதிர்காலத்தில் இருமுனை அல்லது மும்முனைப் போட்டியாக மாறும். இதன் மூலம் உலகில் ஓரளவு நிம்மதியான ஆட்சி நிலவக் கூடும். அது மார்க்ஸ் எதிர்பார்த்ததுபோல் இல்லாவிட்டாலும் ஒரு நவீன கம்யூனிஸ சமுகத்தின் ஆட்சியாக இருக்கலாம் என்பதே எனது எதிர்பார்ப்பாக இருக்கின்றது.

இன்று ஆசியாவின் மிகப் பிரதான நாடான இந்தியாவிலும் அதனை அண்டிய இலங்கையிலும் ஆட்சியை அமைப்பதிலும் கொண்டுநடாத்துவதிலும் மார்க்ஸிஸ்ட், கம்யூனிஸ்ட்களின் துணை இன்றியமையாதது என்ற கட்டத்தை எட்டியுள்ளது. இந்நாடுகளில் முதலாளித்துவம் மேலோங்கியிருந்தபோதிலும் மார்க்ஸிஸ்டுகளின் வெற்றி முதலாளித்துவத்தின் தோல்வியாக மாறிவருகின்றது. இன்று ஜனநாயகம் என்பது யுத்தங்களின் மூலமும் மக்களை அடிமைப்படுத்துவதன் மூலமும்

போதிக்கப்படுகின்ற ஒரு பாடமாக மாறிவருகின்றதேயன்றி பொதுமக்கள் மத்தியில் எந்தவித பாரிய தாக்கங்களையும் அது ஏற்படுத்தவில்லை.

மக்களை தூண்டிவிடுவதன் மூலமும் கலவரங்களை ஏற்படுத்துவதன் மூலமும் தமக்கெதிரானவர்களை துரோகிகள் எனக் கூறி மக்களை நம்ப வைப்பதன் மூலமும் சிலர் தமது ஆசனங்களைத் தக்கவைத்துக் கொண்டிருக்கின்றனர். மக்கள் ஆதரவை அதிகம் கொண்ட ஒரு கட்சி எதை வேண்டுமென்றாலும் செய்யலாம் என்ற இழி நிலை இன்று ஏற்பட்டுள்ளது. இதனால்தான் உலகில் இன ரீதியிலான கட்சிகளின் வருகை அதிகரித்துக் கொண்டிருக்கின்றது. ஆசிய நாடுகளைப் பொறுத்தவரை அந்நாட்டு மக்கள் மிகவும் இறுக்கமான சமயப் பற்றுள்ளவர்களாய் இருக்கின்றனர். மதம் என்பது எல்லோராலும் மதிக்கப்படுகின்ற ஒரு விடயம் என்பதால் மதவாதிகள் தாம் விடுகின்ற தவறை யாராவது தட்டிக் கேட்டால் அது அந்த மதத்துக்கெதிரான நடவடிக்கை எனக் கூறி மக்களைத் தூண்டிவிடுவதன் மூலம் தமது தவறுகளை மறைத்துக்கொள்கின்றனர்.

தான் செய்த தவறுகள் எப்படியாவது ஒருவருக்குத் தெரியவந்துவிட்டால் அது குறிப்பிட்ட சாட்சி மூலம் பகிரங்கப்படுத்தப்பட்டு விடும் என்ற அச்சம் ஏற்படுகின்ற வேளைகளில் தனது தவறை குறிப்பிட்ட அந்நபர் மீது சூட்டி முன்கூட்டியே காரியத்தில் இறங்கி விடுகின்றனர்.





குறிப்பிட்ட நபர் எவ்வெவ் விடயங்களில் பலவீனமானவராக இருக்கின்றாரோ அதையெல்லாம் குற்றச்சாட்டாக அவர் மீது சுமத்திவிடுவதன் மூலம் தமக்கிருக்கின்ற மக்கள் ஆதரவைப் பயன்படுத்தி தலைமைத்துவத்திலும் அதிகாரத்திலும் இருப்பவர்கள் தப்பித்துக் கொள்கின்றனர். பொதுமக்களைப் பொறுத்தவரை குற்றத்தைச் சுமத்துகின்றவர் அதிகாரத்தோடும் நிறைந்த பொருளாதாரத்தோடும் இருந்துவிட்டால் அவர் சொல்வதை உண்மையென நம்பிவிடுகின்றனர். ஆட்சியாளர் குற்றம் இழைத்து விட்டார் எனக் கூறுகின்ற நபர் அதிகாரத்திலோ பொருளாதாரத்திலோ பலம் குன்றியவராக இருந்தால் அவரது வார்த்தை மதிப்பிழந்து போய்விடுகின்றது.

குற்றத்தைச் சுமத்துகின்றவர் எதிர்ச்சக்திகளிடம் பணத்தைப் பெற்றுக் கொண்டு சமுகத்தைக் காட்டிக்கொடுத்து விட்டார் என்று சமுக உணர்வுகளைத் தூண்டிவிடுவதன் மூலம் எதிராளியைப் பலமிழக்கவும் சமுகத்திலிருந்து ஓரங்கட்டவும் முயற்சிக்கின்றார். அதையும் மீறி குற்றம் சுமத்திய நபர் முன்னேற நினைக்கின்ற போது அவரைக் கொலை செய்யவும் இவர்கள் தயங்குவதில்லை. இதனால்தான் பொருளாதார சமத்துவம் என்பது அவசியமாகின்றது.

பொருளாதார சமத்துவம் இல்லாமல் ஆகின்றபோதுதான் முதலாளித்துவ வர்க்கம் தோற்றம் பெற்று ஒரு அடிமை முறை சமுகத்துக்கு வழி

சமைக்கின்றது. சமுதாயம் வர்க்கப் பகைமையின் அடிப்படையில் அமைந்திருப்பதனால் பொருளாதார ரீதியாகப் பலம்வாய்ந்த சமுகம் பலமற்றவர்களை அடக்கியாளும் ஒரு கருவியாக அரசை ஏற்படுத்திக் கொண்டது. பொருளாதார சமத்துவம் பேணப்படுகின்றபோது அரசு என்ற ஒன்றே தேவையில்லை என்ற நிலை தோன்றிவிடுகின்றது என்பது மார்க்ஸினுடைய வாதங்களிலொன்றாக இருக்கின்றது.

இன்று மேலைத்தேச நாடுகளை நாம் நோக்குகின்றபோது அந்நாட்டு மக்கள் வாக்களிப்பதில் காட்டுகின்ற ஆர்வம் அரசியல் சார்ந்த ஏனைய நடவடிக்கைகளில் குறைவாகவே உள்ளது. அரசியல் தொடர்பாக எந்தவித அதீத ஈடுபாடுகளையும் அம்மக்கள் கொண்டிருக்கவில்லை. நிம்மதியான உலகை நோக்கியே அம்மக்கள் பயணிக்க நினைக்கின்றனர். அவர்களைப் பொறுத்தவரை அரசு என்பது ஒரு முக்கியத்துவமான விடயமாக மேலைத்தேச நாடுகளில் காணப்படவில்லை. வாக்களிப்பு நிலையங்களையும் தமது காலடிக்குக் கொண்டுவந்தாலேயே வாக்களிப்போம் என்ற நிலை அந்நாடுகளில் வளர்ச்சியடைந்து வருகின்றது.

ஜனநாயகம் பற்றிப் பேசுகின்ற அமெரிக்காவில் நடக்கின்ற தேர்தலுக்கும் தற்போது கண்காணிப்பாளர்கள் தேவை என்ற அளவுக்கு அம்மக்களின் ஏகோபித்த கருத்துக்களுக்கு விரோதமான முறையில் தேர்தல் கால





நடைமுறைகள் காணப்படுகின்றன. இதனால் அமெரிக்க மக்கள் தமது நாட்டு அரசியலை அதிக ஆர்வத்தோடு நோக்காத போதிலும் உலகில் மேலாதிக்கம் செலுத்தக் கூடியதொரு நாடாக தமது நாடு திகழ வேண்டுமென்பதில் விடாப்பிடியாக இருக்கின்றனர். இதற்காக எதையும் இழக்க அவர்கள் தயாராக இருக்கின்றனர்.

இருந்தாலும், அவர்கள் மனங்களிலும் ஆட்சி செய்வோரும் பொதுமக்களும் ஒன்றே என்ற நிலை இன்று மேலோங்க ஆரம்பித்துள்ளது. எனவே சகலரும் சமமாக இயங்குகின்றபோது அதற்கு அரசு, ஆட்சி என்ற பெயர்கள் அவசியமில்லை. அவர்களுக்கு கூடுதல் அதிகாரம், அங்கீகாரமும் அவசியமில்லை. காரியாலயங்களை அதிகாரிகள் நிர்வகிப்பதுபோன்று நாட்டையும் தகுதிவாய்ந்தவர்களிடம் நிர்வகிக்கக் கொடுத்துவிட்டால் போதுமானது.

நாடாளுமன்றத்தை கண்ணியமிக்க சபை என்ற உயர்நிலையிருந்து நீக்கி அதை சாதாரண ஒரு நான்கு சுவர்களினாலான கட்டடம்தான் என்ற நிலைக்கு இன்றைய அரசியல்வாதிகள் கொண்டுவந்துள்ளனர். கண்ணியமானவர்கள் எங்கிருக்கின்றனரோ அது கண்ணியமான சபை. கண்ணியமில்லாதவர்கள் இருக்கின்ற சபை பாராளுமன்றமாக இருந்தாலும் அது எப்படியொரு கண்ணியமான சபையாக இருக்க முடியும்? இப்படியானவர்களால் எப்படி அரசியல் ரீதியில் சிறந்த

தலைமைத்துவத்தை மக்களுக்கு வழங்க முடியும். இவர்களை ஏற்றுக்கொள்ள வேண்டிய கட்டாயம் மக்களுக்கு இல்லை என்ற நிலை ஏற்படுகின்றபோது ஆட்சியும் அரசும் அவசியமில்லை.

ஒருநாடு நிர்வகிக்கப்படுகின்றது எனும்போது அங்கு சமத்துவமற்ற நிலை இல்லாதொழிக்கப்படல் வேண்டும். தமது ஆட்சிப்பரப்பிற்குள் வாழ்கின்ற மக்களுக்கிடையேயும் வேறுபட்ட மொழி, சமய, கலாசாரங்களை பேணுபவர்களுக்கிடையிலான அதிகாரப்பங்கீட்டிலும் சமத்துவம் பேணப்படல் வேண்டும். மக்கள் தொகைக்கேற்பவோ, நிலப்பரப்பிற்கேற்பவோ பிரதேசங்களில் காணப்படுகின்ற வளங்களின் அடிப்படையிலோ வித்தியாசங்கள் காட்டப்படக் கூடாது. இந்த நிலையை நிவர்த்தி செய்வதில் திறமையான தமைலைத்துவம் கூடுதல் பங்காற்ற முடியும்.

ஒரு சிறந்த ஆட்சியாளன் சர்வாதிகாரியாக இருந்தாலும் அதில் தவறில்லை. அவன் இனம், மதம், மொழி போன்றவற்றால் ஏற்படுகின்ற பிணக்குளைத் தீர்த்து மக்கள் மத்தியில் ஐக்கியத்தைத் தோற்றுவிக்கக் கூடியவனாக இருத்தல் வேண்டும். அங்கு வாழ்கின்ற மக்கள் ஏனைய இனத்தவர்களின் உணர்வுகளை மதிக்கக் கூடியவர்களாக இருக்க வேண்டும். இதன் மூலமே தேசிய ஒருமைப்பாடுடைய அரசை உருவாக்க முடியும்.





ஒரு நாட்டில் பல்வேறு இனக்குழுக்கள் வாழுகின்ற போது அவ்வினங்களைப் பிரதிநித்துவப்படுத்தும் கட்சிகள் அவசியம் இருத்தல் வேண்டும். அதன் மூலம் அம்மக்கள் பிரதிநிதிகள் சமுகத்தின் அபிலாஷைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி அம்மக்களின் உரிமைகளைப் பாதுகாக்க முடியும். ஜனநாயகத்தின் பண்புகளில் ஒன்றாக அரசியல் கட்சிகளின் அதிகரிப்பை நாம் அங்கீகரிக்க முடியும். ஒரு நல்ல ஆட்சியில் பல்வேறு இனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற கட்சிகளும் ஒன்றிணைந்த கூட்டாட்சி நிலவ வேண்டும். இதன் மூலம் இனவாத, வகுப்புவாத, பிரதேசவாத சிந்தனைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியும்.

இங்கு சகல மக்களின் உரிமைகளும் சமமாக மதிக்கப்படுகின்றபோதே மக்கள் மத்தியில் தேசியவாத உணர்வு மேலோங்கி நிற்கும். இதற்கு உதாரணமாக நாம் இந்திய கூட்டாட்சி முறையைக் கூறலாம். இங்கும் இன, மத, மொழி, கலாசார ரீதியில் பிரிவுபட்ட சமுக அமைப்பும் கட்சிகளும் காணப்படுகின்ற போதிலும் அங்கு இந்தியன் என்கின்ற தேசிய உணர்வு மேலோங்கி நிற்கின்றது. இது கூட்டாட்சி பிரதான பங்கு வகிக்கின்றது. இருந்தாலும் இங்கும் மதவாதிகளின் செல்வாக்கு அதிகரித்திருப்பதை நாம் காணலாம். பாபரி மஸ்ஜிதை இடிப்பதா? இல்லையா? என்பது தேர்தலில் வெற்றி, தோல்வியை நிர்ணயிக்கும் ஒரு பிரதான கேள்வியாக அங்கு இருந்தது. தேசியவாத உணர்வு சகல மக்களின்

நலன்களையும் ஆளுகின்ற தரப்பினர் சமமாக மதிக்கின்றபோது மாத்திரமே சாத்தியமாகின்றது.

அதிகாரம் என்பது மனித நடவடிக்கைகளோடும், செயற்பாட்டோடும், உறவுகளோடும் தொடர்புபட்ட ஒரு விடயமாகும். இது ஒருவர் இன்னுமொருவருடைய நடவடிக்கையில் செல்வாக்குச் செலுத்துவதைக் குறிக்கின்றது. ஒரே நாட்டில் ஒரு குறிப்பிட்ட சாரார் ஏனையோர் மீது அதிகம் செல்வாக்குச் செலுத்துகின்றபோது அங்கு அதிகார துஷ்பிரயோகம் நடைபெற வழிவகுக்கின்றது.

ஒரு ஆட்சி நல்லாட்சி என்றால் அங்கு அதிகார சமத்துவம் காணப்படல் வேண்டும். எந்த நிலையிலும் மனிதனிடம் இன உணர்வு மேலோங்கி வருவதை நாம் அவதானிக்கலாம். இன ரீதியிலான யுத்தங்களுக்கு உலகில் எந்தவொரு நாட்டிலும் தீர்வு காணப்படவில்லை. நாம் ஏற்கனவே கூறியதுபோல் நெல்சன் மண்டேலா ஒரு இலட்சிய அரசியல்வாதியாக இருந்ததனால் அவரிடம் விட்டுக் கொடுப்பு என்ற விடயம் அதிகம் இருந்தது. இதனால்தான் தென்னாபிரிக்காவிலிருந்த இன ரீதியான பிளவு முடிவுக்கு வந்தது. இன்று அப்படியானவர்கள் ஆட்சியில் இல்லை என்பதால் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளும் இல்லை.

மக்களை நல்வழிப்படுத்தவும், மனித வாழ்க்கையை





சீரமைத்து ஒழுங்கமைக்கவும் அவனது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளவும் மனிதனால் உருவாக்கப்பட்ட மொழி, பொருளாதாரம், சமயம், கலாசாரம் என்பவைகளெல்லாம் மனிதனை இன்று அடிமைகளாக மாற்றியுள்ளன. மனிதன் எப்படியான நிலையை அரசியலில் தோற்றுவிக்க நினைத்தாலும் மொழி, பொருளாதாரம், சமயம், கலாசாரம் என்பன அதன் பாதையில் திசைதிருப்பி விட்டு விடுகின்றன.

பொருளாதாரத்தால் வாங்க முடியாத அரசியல்வாதிகளே இல்லை என்று கூறுமளவுக்கு மலிவு விலையில் அரசியல்வாதிகள் சந்தையில் குவிந்து காணப்படுகின்றனர். இவ்வாறு தடம்புரண்டு போயுள்ள அரசியல் தளத்தில் பயணிக்க நினைக்கின்ற இளைஞனான நீ நாளை உனது சரித்திரம் எதிர்கால சந்ததியின் பார்வைக்குக் கொண்டுவரப்படுகின்றபோது அது அவர்களாலும் பின்பற்றப்படுகின்ற ஒரு சிறந்த சரித்திரத்தை ஏற்படுத்தி விட்டே செல்லவேண்டும். இதற்கு அரசியல்தான் சரியான பாதை எனக் கண்டால் அதில் முத்திரை பதிக்க முயற்சி செய். அல்லது முட்டாள்களும் மோசடிக்காரர்களும் நிறைந்த அரசியல் சூழ்நிலையில் மிகப்பெரிய மோசடிக்காரனாலேயே தாக்குப்பிடிக்க முடியும் என்ற தத்துவத்தையும் உணர்ந்து பயணம் செய்து கொள்.

நன்றி

இப்படிக்கு
உண்மையுள்ள
*உன் அன்பு நண்பன்*

# QUOTABLE QUOTATIONS

☆ I don't know what I may appear to the world, but to my self I seem to have been only like a boy playing on the seashore, and diverting my self is now and the finding a smoother pebble or a prettier shell then ordinary, while the great ocean of truth that lay undiscovered before me. - Sir Isaac Newton

☆ The happiest women, like the happiest nation have no history. - George Eliot

☆ A little knowledge is a dangerous thing. - Pope

☆ Man is by nature a political animal. - Aristotle

☆ Poems are made by fools like me, but only god can make a tree. - A.J.Kilmer

☆ The ballot is stronger than the bullet. - Abraham Lincon

☆ Power without responsibility - the prerogative of the harlot throughout the ages. - Rudyard Kipling

☆ Government of the people, by the people, for the people. - Abraham Lincon

☆ Power tends to corrupt and absolute power corrupts absolutely. - Lord Acton





☆ The only purpose for which power can be rightfully exercised over any member of a civilized community, against his will, is to prevent harm to others. His own good, either physical or moral, is not a sufficient warrant. - John S Mill

☆ Capitol exploits the labor of a few to multiply itself. - Mahatma Gandhi

☆ In war, resolution: In defeat, defiance: In victory, magnanimity: In peace, goodwill. - Winston Churchill

☆ Corruption wins not more than honesty. - Shakespeare

☆ You can fool all the people some of the time, and some of the all the time, but you can't fool all the people all of the time. - Abraham Licon

☆ A man will turn over half a library to make one book. - Johnson

☆ It is an unfortunate fact that we can secure peace only by preparing for war. - John F Kannady

☆ Good government is no substitute to self government. - Morley

☆ A politician is a statesman who approaches every question with an open mouth. - Adlai E Stevenson

☆ Language is the dress of thought. - Samuel Johnson

# நூலாசிரியர் பற்றி .....

சுலைமாலெப்பை றியாஸ் தனது பாடசாலைக்கல்வியை கல்முனைக்குடி அல்- அஸ்ஹர் வித்தியாலயத்திலும், கல்முனை ஸஹிறாக் கல்லூரியிலும் கற்றார். பேராதனைப் பல்கலைக் கழகத்தின் கலைப்பட்டதாரியான இவர் ஓர் ஆசிரியராவார். பத்திரிகைத்துறையில் முதுமானிப் பட்டத்தைப் பூர்த்திசெய்துள்ள இவர் கணனியிலும், மும் மொழிகளிலும் தேர்ச்சி பெற்றவர்.

தற்போது இவர் பல சமூக சேவை அமைப்புக்களில் பொறுப்பு வாய்ந்த பதவிகளை வகித்துவருகின்றார். குறிப்பாக ஹொலிபீல்ட் அமைப்பின் பொதுச் செயலாளராகவும், சமாதானக் கற்கை நிலையத்தின் பணிப்பாளராகவும், சர்வதேச முகாமைத்துவ ஆலோசனைச் சேவை நிறுவனத்தின் பணிப்பாளராகவும், தென் கிழக்கு மீனவர் தொழிற் சங்கத்தின் திட்ட முகாமையாளராகவும் பணியாற்றுகிறார்.

இப்பணிகளுக்கு மத்தியில் பத்திரிகைத்துறையிலும் பாரிய பங்களிப்புச் செய்துவருகிறார். குறிப்பாக நவமணிப் பத்திரிகையின் கிழக்கு மாகாணச் செய்தியாளரான இவர் ஆசிய செய்தி நிறுவனத்தில் தெற்காசியாவுக்கான செய்தியாளராக உள்ளார் அத்துடன் லண்டன் ஸ்கை நியுஸ், லண்டன் காடியன், கனடாவின் சி.பி.சி, ஜப்பானின் மெனிச்சிப் பத்திரிகை ஆகிய நிறுவனங்களின் செய்தியாளர்களோடு கடமையாற்றியுள்ள இவர் ஊடகத்துறையில் சுமார் 10 ஆண்டு அநுபவமுள்ளவர்.

சமாதான நீதவானகவும் உள்ள இவர் சர்வதேச கிரிக்கட் நிகழ்வுகள், அரசியல் தளம் ஆகிய நூல்கள் மூலம் தனது எழுத்தாற்றலை வெளிக்காட்டியிருப்பது இவரின் மதிப்பை மேலும் ஓங்கச் செய்துள்ளது.

கலாநிதி,
M.S.M. இஸ்மாயில் Ph.D,
பீடாதிபதி, வர்த்தக முகாமைத்துவ பீடம்,
தென் கிழக்குப் பல்கலைக்கழகம்,
இலங்கை.